சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



"நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு."

# மாதா பரிகார மலர்


மார்ச் & ஏப்ரல் 2025
மலர் 46 இதழ் 3 & 4
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.25.00




சேசுநாதரோ உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு:
"பிதாவே, என் ஆத்துமத்தை உம்முடைய
கரங்களிலே ஒப்புக்கொடுக்கிறேன்" என்றார்.
இவைகளைச் சொல்லி உயிர்விட்டார். லூக்காஸ் 23:46

✝

JMJ

# 17-ம் வருட நினைவு



## சங். அந்தோனி சேவியர் சுவாமி அவர்கள்

(ஸ்தாபகர், இயக்குநர், ஆன்மகுரு, பரிகார கன்னியர் சபை,
மாதா அப்போஸ்தலர்கள் சபை & மாதா அப்போஸ்தலர்கள்
மாதாவின் சூசை அச்சகம், மாதா பரிகார மலர்)


பிறப்பு 28.03.1925 குருப்பட்டம் 25.03.1952 இறப்பு 27.03.2008

சங்கைக்குரிய அந்தோனி சேவியர் சுவாமி அவர்கள்
மரித்து 17 வருடம் நிறைவுறுகிறது.
அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக அனைவரையும்
ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்: மாதா அப்போஸ்தலர்கள் சபை & மாதா அப்போஸ்தலர்கள்,
ரோஸா மிஸ்திகா, சகாயமாதாபட்டணம், தூத்துக்குடி -2.

# நமதாண்டவரின் திருப்பாடுகள்

**(“நம் ஆண்டவரின் துயரப் பாடுகள்” என்னும் முத்திப்பேறு பெற்ற ஆன் கேத்தரீன் எம்மெரிக்கின் தியானங்களிலிருந்து எடுக்கப்பட்டது.)**



கல்வாரியில் திடீரெனப் பரவிய இருளால் ஏற்பட்ட மனக் கலக்கம் விவரிக்கப்பட இயலாததாக இருந்தது. அந்த இருள் தொடங்கியபோது, சுத்தியல்களின் ஓசை, கூட்டத்தின் இரைச்சல், சிலுவைகளில் அறையப்பட்டிருந்த இரு கள்வர் களின் கூச்சல்கள், பரிசேயர்களின் அவமான வார்த்தைகள், கொலைஞர்கள் குடிவெறியில் எழுப்பிய சத்தங்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்த தால், இயற்கையின் முகத்தில் தோன்றிய அந்த மாற்றத்தை யாரும் கவனிக்கவில்லை. ஆனால் இருள் அதிகரித்த போது, ஒவ்வொரு சத்தமும் நின்று போகிறது, ஒவ்வொரு குரலும் கிசுகிசுப்பானதாக மாறுகிறது. மனவுறுத்தலும், கடுந்திகிலும் இருதயங்களை ஆக்கிரமிக்கின்றன. சிலுவையின் அருகில் நின்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக அதனிடமிருந்து தூரமாகச் செல்கிறார்கள்.

இச்சமயத்தில்தான் சேசு தம் திருமாதாவை அர்ச். அருளப்பரிடம் ஒப்படைக்கிறார். அவர்கள் துக்கத்தால் மேற்கொள்ளப்பட்டு, சற்றுத் தொலைவுக்குக் கைத்தாங்கலாக அழைத்துச் செல்லப் படுகிறார்கள். இருள் மேலும் அடர்த்தியாகிறது. அங்கு நிலவும் மவுனம் புத்தியைப் பேதலிக்கச் செய்வதாக இருக்கிறது. கடவுளின் பகைவர்கள் கடும் அச்சத்தை உணர்கிறார்கள். சிலர் வானத் தைப் பார்க்கிறார்கள். மற்றவர்களோ, மனவுறுத்தலால் நிரப்பப்பட்டு, சிலுவையை நோக்கித் திரும்புகிறார்கள், தங்கள் மார்பில் அறைந்துகொள்கிறார்கள்.

பரிசேயர்கள் உள்ளுக்குள் நடுங்கினாலும் வெளியே தைரியமாக இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இறுதியில் அவர்களும் தங்கள் போலியான மன உறுதியை இழந்து அச்சப்படுகிறார்கள். சூரியன் அடர் மஞ்சள் நிறமாயிருக்கிறது. நட்சத்திரங்கள் காணப்படுகின் றன. ஆனால் அவற்றின் ஒளி செந்நிறமாயிருக்கிறது. பறவைகளும் கூட கடும் அச்ச வசப்பட்டுத் தரையில் விழுகின்றன; பரிசேயர்கள் ஏறியிருந்த குதிரைகளும், கழுதைகளும் அச்சத்தால் தங்கள் தலைகளைக் கால்களுக்குள் நுழைத்துக்கொண்டு குனிந்து நிற்கின்றன.

சிலுவையைச் சுற்றிலும் ஓர் அழுத்தமான அமைதி அரசாளுகிறது. சேசுநாதர் அதன்மீது தனியாகத் தொங்குகிறார்; அவர் தமது சீடர்களும், தம்மைப் பின்சென்றவர்களும், நண்பர்களு மாகிய அனைவராலும் கைவிடப்பட்டிருக்கிறார்; அவரிடமிருந்து ஏராளமான ஞான, சரீர நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்களில் ஒருவன் கூட, அவரது இந்தக் கசப்பான அவஸ்தையை அணுவளவாவது குறைக்கும்படி அவருக்கு அருகில் இல்லை. அவருடைய ஆத்துமம் உரைக்க இயலாத கசப்பு, துயரம் ஆகியவற்றின் பெருங்கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. அவருக்குள் உள்ள எல்லாமே இருளாகவும், இழிந்ததாகவும் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்த மகா பரிதாபத்திற்குரிய நிலையிலும், கருணையே உருவான திவ்ய இரட்சகர் தமது பரலோகப் பிதாவை நோக்கித் திரும்பித் தம் எதிரிகளுக்காக ஜெபிக்கிறார்; தமது திருப்பாடுகளின் கிண்ணத்தை அவர்களுடைய இரட்சணியத்திற்காகவும் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறார்.

மூன்று மணி வாக்கில், நம் ஆண்டவர் உரத்த சத்தமாக, "**என் தேவனே, என் தேவனே! ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?**" என்று உரத்த சத்தமாய்க் கூவுகிறார். (தாமே மெசையா என்பதை நிரூபிக்கும் விதமாக, 21-ம் சங்கீதத்தை அவர் உச்சரிக்கிறார்.) திவ்ய கன்னிகை தன் திவ்ய சுதனின் இந்தக் குரலைக் கேட்கும்போது, பல வாட்களால் தன் இருதயம் துளைக்கப்படுவதாக உணர்ந்து, வேதனையால் துடிக்கிறார்கள். அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள அவர்களால் இயலவில்லை. இதோ, அவர்கள் தன் திருச்சுதனின் சிலுவையை நோக்கி முன்னேறிச் சென்று, அதன் அடியில் மீண்டும் வந்து நிற்கிறார்கள். அருளப்பரும், க்ளேயோஃபாஸின் மனைவியான மற்றொரு மரியம்மாளும், மரிய மதலேனம்மாளும், சலோமையம்மாளும் உடன் வருகிறார்கள்.

(ஓ, அதிசயமே! திவ்ய இரட்சகர் தமது கொடூர துன்பத்தில் தம் திருத்தாயாரின் அருகாமையை உணர்கிறார்! அவர் அவர்களைக் காணவில்லை. கண்கள் மூடியிருக்கின்றன. என்றாலும், அனைவராலும் கைவிடப்பட்டிருப்பதன் வேதனை அவருடைய முகத்திலிருந்து சற்று விலகி, ஒரு வித சமாதானம் அந்தத் திருமுகத்தை நிரப்புவதைக் காண முடிகிறது. ஒன்றையொன்று ஆற்றித் தேற்றத் துடிக்கும் இரண்டு மாசற்ற திரு இருதயங்கள்!)

மூன்று மணி நெருங்க நெருங்க ஒளி படிப்படியாக மீண்டும் தோன்றுகிறது. சூரியன் மீண்டும் பிரகாசிக்கிறது, ஆயினும் அது மங்கலாக, செந்நிற மூடுபனியால் சூழப்பட்டதுபோல் தோன்றுகிறது; நட்சத்திரங்கள் மறைகின்றன. சேசுநாதரின் எதிரிகள் மீண்டும் தங்கள் ஆங்கார உணர்வுக்குத் திரும்புகிறார்கள். இச்சமயத்தில்தான் "இவன் எலியாசைக் கூப்பிடுகிறான்" என்கிறார்கள்.

ஒளி தொடர்ந்து அதிகமதிகமாகத் திரும்பி வருகிறது. நம் ஆண்டவரின் களைத்துச் சோர்ந்து போன முகம் மீண்டும் துலக்கமாகத் தெரிகிறது. அவரது திருச்சரீரம் அவர் இழந்து போயிருக்கிற மிகுதியான திரு இரத்தத்தின் காரணமாக, அதிகமாக வெளுத்திருக்கிறது. "ஆலையில் மிதிக்கப்படும் திராட்சையைப் போல நான் நசுக்கப்பட்டேன். தண்ணீர் வெளிப்படும் வரை என் இரத்தம் வெளியே ஊற்றப்படும்" என்று சேசுநாதர் கூறுவதாக நான் உணர்கிறேன்.

சேசுநாதர் ஏறக்குறைய மயக்கமடையும் நிலையில் இருக்கிறார்; அவரது நாவு காய்ந்து வறண்டிருக்கிறது. மிகுந்த முயற்சியோடுதான் "**நான் தாகமாயிருக்கிறேன்!**" என்ற வார்த்தைகளை அவர் உச்சரிக்கிறார்: (ஆத்துமங்களின் இரட்சிப்பில் அவர் கொண்ட அடங்காத தாகம்! தமது பிதாவின் மடியில் நித்தியப் பரலோகப் பேரின்பத்தில் திளைத்துக்கொண்டிருந்தவரை இந்தக் கேடுகெட்ட அசுத்த உலகிற்கு இழுத்து வந்து, நிர்ப்பாக்கியப் பாவிகளுக்குரிய கழுமரத்தில் நிர்வாணியாகத் தொங்க வைத்திருக்கிற அதிசயத்திற்குரிய தாகம்! தமது திரு இரத்தத்தைத் தங்களுக்கு வீணாக்கி நித்திய அழிவைத் தேர்ந்துகொள்பவர்களால் அவர் அனுபவிக்கும் மகா கொடிய தாகம்! இது உண்மையில் கிட்டத்தட்ட அவர் அனுபவிக்கிற "நரக வேதனையாகவே" இருக்கிறது!)

இதோ, நம் ஆண்டவரின் இறுதி நேரம் வந்து விட்டது. அவருடைய மரணப் போராட்டம் தொடங்கி விட்டது. அவரும், புதிய ஏவாளாகிய திருத்தாயாரும் இணைந்து மனித இரட்சணிய அலுவலை நிறைவு செய்யப் போகும் நேரம்! அருளப்பர் மாசற்ற ஆத்துமங்களின் சார்பாகச் சிலுவையடியில் நிற்கிறார்; அவர் தமது மேலங்கியைக் கொண்டு சேசுநாதரின் திருப்பாதங்களைத் துடைக்க முயல்கிறார். குளிர்ந்த வியர்வை சேசுவின் அவயவங்களை மூடுகிறது. மனந்திரும்பித் தவம் செய்யும் பாவிகளின் பிரதிநிதியாக, மரிய மதலேனாள் தன் உச்சபட்ச துக்கத்தில் சித்தப் பிரமை பிடித்தவள் போல் தரையில் விழுந்து கிடக்கிறாள். திவ்ய கன்னிகை சலோமையாலும், கிளேயோபா மரியம்மாளாலும் தாங்கப்பட்டு, சேசுவுக்கும் நல்ல கள்ளனுக்கும் நடுவில் நிற்கிறார்கள். அவர்களுடைய கண்கள் மரிக்கிற தனது திருமகனின் திருமுகத்தின் மீது ஆணியடித்தது போலப்

பதிந்திருக்கின்றன. அவரோடு சேர்ந்து, "**எல்லாம் முடிந்தது**" என்ற வார்த்தைகளை அவர்களும் உச்சரிக்கிறார்கள்.

இதோ, நம் திவ்ய இரட்சகர் உரத்த சத்தமாக, "**பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்படைக்கிறேன்**" என்ற வார்த்தைகளை உச்சரிக்கிறார். தெளிவான, கிளர்ச்சியூட்டும் குரலில் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் பரலோகத்திலும், பூலோகத்திலும் எதிரொலிக்கின்றன. ஒரு கணம் முழு மனத் திருப்தியைத் தம் கண்களில் வெளிப்படுத்தியபின், நம் திவ்ய இரட்சகர் தலை சாய்த்து மரிக்கிறார். அருளப்பரும், பரிசுத்த பெண்களும் தரையில் சாஷ்டாங்கமாக விழுகிறார்கள்.

இயற்கை கொந்தளிக்கிறது. பூமி நடுங்குகிறது; கல்வாரியின் மீது பாறைகள் பிளக்கின்றன. குறிப்பாக, ஆண்டவரின் சிலுவை நடப்பட்டிருக்கிற இடத்திலுள்ள பாறை பிளந்து, அவரையும், கெட்ட கள்ளனையும் பிரிக்கிறது. இது வரை வாய்மூடி மவுனமாயிருந்த பிரபஞ்சம் முழுவதும் தனது ஆழ்ந்த அமைதியை உடைத்து உறுமுகிறது. (சாத்தான் தன் துணைப் பேய்களை இழுத்துக்கொண்டு நரகத்தில் விழுகிறான். கிறீஸ்துநாதரின் மனித சுபாவத்தின்மீது அவன் தான் பெற்றுக்கொண்டதாக நினைத்த மாபெரும் வெற்றியே அவன் மீது விழுந்த கடவுளின் திருக் கரத்தின் மிகப் பலமான அடியாக இருக்கிறது. வெளித் தோற்றத்தில் அவனுடைய வெற்றியாக இருந்தது, அந்தரங்கத்தில் அவனுடைய நித்திய தோல்வியின் தொடக்கமாக ஆகியிருக்கிறது.)

கிறீஸ்துநாதரை நேசித்தவர்களின் இருதயங்களைத் துயர வாள் ஊடுருவியிருக்கிறது. இதுவே செந்தூரியனுக்கு வரப்பிரசாதத்தின் நேரமாக இருக்கிறது. அவனது இருதயம் தொடப்பட்டு விட்டது. தன் கடமையை நிறைவேற்றும்படி சேசுநாதரின் திரு இருதயத்திற்குள் தனது ஈட்டியைச் சொருகியபின் அவன் உரத்த சத்தமாக: "ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் தேவனாகிய மகா உன்னத சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக! இந்த மனிதர் மெய்யாகவே தேவ சுதனாயிருந்தார்!" என்று விசுவாச அறிக்கையிடுகிறான். அவனோடு வேறு பல வீரர்களும் அனைத்தையும் இழந்து தொங்கும் பலிப் பொருளானவர் மீது விசுவாசம் கொள்கிறார்கள்.

முடிவு: சேசுநாதருடையவும், தேவமாதாவினுடையவும் இந்தக் கொடூர மரண வாதையை விட கிறீஸ்தவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியும், சமாதானமும் தருகிற காரியம் ஏதுமில்லை! ஏனெனில் "மெய்யாகவே அவரே நமது ஆயாசத்தை எடுத்துக்கொண்டு, நமது வேதனைகளைத் தாமே சுமந்துகொண்டார்... நமது பாவங்களுக்காக அவர் காயப்பட்டார்; நமது அக்கிரமங் களுக்காக நொறுக்கப்பட்டார்; நமது சமாதானத்துக்குரிய தண்டனை அவர்மீது விழ, அவர் காயத்தால் நாம் இரட்சிக்கப்பட்டோம்" (இசை. 53:4,5). அவரது திரு இரத்தத்தினுடையவும், இணை இரட்சகியின் அளவற்ற வியாகுலங்களுடையவும் நித்திய இரட்சணியப் பேறுபலன்களை நாம் தவறாமல் பெற்றுக்கொள்ளும்படி, "அதிகமதிகமாய் அச்ச நடுக்கத்தோடு நம் ஈடேற்ற (மீட்பின்) வேலையைப் பார்ப்போமாக!" (பிலிப். 2:12). மரியாயே வாழ்க!

**தபசுகால ஒருசந்தி சுத்தபோசனக் கடமைகளை நினைவுபடுத்துகிறோம்!**

தபசு காலத்தின் தொடக்கமாகிய இந்த ஆண்டின் சாம்பல் புதன் 05.03.2025 அன்று வருகிறது. அன்றும், பெரிய வெள்ளியன்றும் ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரிப்பது நம் கடமை. **எனவே விசுவாசிகள் இந்தக் கடமைகளைத் தவறாமல் நிறைவேற்றுவதோடு, மேலும், இந்தப் பரிசுத்த காலத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து, திருச்சபையின் கருத்துப்படி ஜெபித்து, தவம் செய்து, பரித்தியாகங்கள் செய்து, ஏழைகளுக்கு உதவி செய்து, முழு மனமாற்றமடையவும், தேவசிநேகத்திலும், பிறர்சிநேகத்திலும் வளரவும், இரட்சிப்பிற்கும் அர்ச்சிப்பிற்கும் தேவையான பேறுபலன்களை சம்பாதித்துக்கொள்ளவும்** அன்புடன் அறிவுறுத்துகிறோம்.

# தேவமாதாவின் மாபெரும் வியாகுலம்!

**(அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் தியானப் பிரசங்கம்)**

சேசுநாதர் துயரங்களின் அரசர் என்றும், வேதசாட்சிகளின் அரசர் என்றும் அழைக்கப்படுவது



போலவே, மாமரியும் தகுந்த காரணத்தோடுதான் வேத சாட்சிகளின் இராக்கினி என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் தன் திருச்சுதனுக்குப் பிறகு, ஓராயிரம் மரணங் களுக்குச் சமமானதும், வேறு எந்த வாதைையையும் விட மகா கொடியதுமான வாதையை ஏற்று அனுபவித்ததன் மூலம் அவர்கள் இந்தப் பட்டத்திற்குத் தகுதி பெற் றார்கள். இதன் காரணமாக, அவர்கள் அர்ச். லாரென் ஸின் ரிச்சர்ட் என்பவரால், வேதசாட்சிகளின் வேதசாட்சி என்று அழைக்கப்படுகிறார்கள். "ஆண்டவர் உனக்குத் துன்பத்தால் முடிசூட்டுவார்" என்னும் இசையாஸின் வார்த்தைகளும் (22:18) மாமரிக்குப் பொருந்துகின்றன. ஏனெனில் சகல வேத சாட்சிகளின் ஒன்றிணைந்த துன்பங்களுக்கும் அப்பாற்பட்டதாக மாமரியின் துன்பம் இருந்தது. அதுவே அவர்களை வேதசாட்சிகளின் இராக்கினியாகக் காட்டுகிற மணிமகுடமாக இருந்தது.

இங்கே ஒரு தாய் மாசற்ற மகன் கொல்லப்படுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதாகிய வேத சாட்சியத்திற்கு உட்படுகிறார்கள். அவர்களது இருதயத்தின் நேசமானவர் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக, காட்டுமிராண்டித்தனமான வாதைகளால் சாவுக்கு உள்ளாக்கப்படுகிறார். தேவமாதா அதைப் பார்த்துக்கொண்டு எதுவும் செய்ய முடியாமல் நிற்க வேண்டும் என்பது அவர்களுக்கு விதிக்கப்பட்ட சிலுவையாக இருந்தது.

யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து, அதிலேயே மரிக்கும்படி அவரைக் கைவிட்டு விட்ட போதும், மாமரி அவரைக் கைவிடவில்லை. அவர்கள் அவருடைய மரணத்தில் அவருக்கு உதவி செய்யும்படி அவருக்கு அருகிலேயே இருந்தார்கள். அர்ச். பொனவெந்தூர் தேவமாதாவிடம்: "கல்வாரிக்குச் சென்றதில் உங்களுக்குக் கிடைத்தது என்ன? நீங்கள் அவருடைய தாய்; அவரது அவமானம் உங்களுக்கும் அவமானம்; குறைந்த பட்சம் கடவுளாயிருப்பவர் தம் சொந்த சிருஷ்டி களுக்காகச் சிலுவையில் அறையப்படுவதைக் காண்பது ஒரு பயங்கரம்; அதுவாவது உங்களை அங்கே செல்லாமல் தடுத்திருக்க வேண்டும். ஆனால் மரியாயே, உங்கள் மாசற்ற இருதயம் அந்த பயங்கரத்தை அல்ல, மாறாக, அவரது துன்பத்தையே நினைத்தது. தனது சொந்த வியாகுலத்தைப் பற்றி அது கவலைப்படவில்லை, மாறாக, உங்கள் பிரிய சுதனின் பாடுகளையும், மரணத்தையும் பற்றியே அது வாடி நொந்தது" என்கிறார். மரண பயங்கரம் கூட அவர்களது திருமகனிடமிருந்து அவர்களைப் பிரிக்க முடியவில்லை என்று மடாதிபதியான வில்லியம் கூறுகிறார்.

மாமரி தன் திருச்சுதன் அனுபவித்த சகல அவஸ்தைகளையும் தானும் அனுபவித்தார்கள்! கிறீஸ்துநாதரின் திருச்சரீரத்திற்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு சித்திரவதையும் அவரது திருத்தாயா ரின் இருதயத்தைக் காயப்படுத்தியது என்கிறார் அர்ச். எரோணிமுஸ். அர்ச். க்றீசோஸ்தோம் அருளப்பர் தொடர்ந்து: **"அச்சமயத்தில் கல்வாரியில் இருக்க நேர்ந்த யாரும் இரு பலி பீடங்களை யும், அவற்றின்மீது நிறைவேறிய இரு மாபெரும் பலிகளையும் பார்த்திருப்பார்கள். ஒன்று, சேசுவின் திருச்சரீரத்திலும், மற்றொன்று மாமரியின் மாசற்ற இருதயத்திலும் நிறைவேறியது"** என்கிறார்.

"ஆனால் நானோ திருச்சுதனின் திருச்சிலுவையாகிய ஒரே ஒரு பீடத்தைத்தான் காண விரும்பு வேன்" என்கிறார் அர்ச். பொனவெந்தூர். அதன்மீது தேவ செம்மறிப்புருவையானவருடன் இந்தத் திருத்தாயாரும் பலியாக்கப்பட்டார்கள். ஆகவேதான் இந்த அர்ச்சியசிஷ்டவர் மாதாவிடம்,

"ஆண்டவளே, எங்கே இருக்கிறீர்கள்? சிலுவைக்குப் பக்கத்திலா? இல்லை, சிலுவையின் மீது, உங்கள் திருச்சுதனோடு நீங்களும் அறையப்பட்டிருக்கிறீர்கள்" என்கிறார். அர்ச். அகுஸ்தினாரும், "திருச்சுதனின் சிலுவையும், ஆணிகளும், அவரது திருத்தாயாரின் சிலுவையும், ஆணிகளுமாகவும் இருந்தன" என்கிறார். ஆம், ஏனெனில் அர்ச். பெர்னார்ட் கூறுவது போல, ஆணிகள் சேசுவின் திருச்சரீரத்தின் மீது ஏற்படுத்திய அதே காயங்களை நேசம் மாமரியின் திரு இருதயத்தின் மீதும் ஏற்படுத்தியது. ஆகவே, அர்ச். பெர்னார்தீன் கூறுவது போல, திருச்சுதன் தம் சரீரத்தைப் பலியாக்கிக்கொண்டிருக்க, அவரது மாதாவோ தனது ஆத்துமத்தைப் பலியாக்கிக்கொண்டிருந்தார்கள்.

தன் குழந்தை சாவதைக் காணச் சகியாத ஆகாரைப் போல (ஆதி. 21:16), தாய்மார் மரிக்கிற தங்கள் குழந்தைகளிடமிருந்து ஓடிப் போகிறார்கள். ஆனால் ஒரு தாய் தன் குழந்தையின் மரணத்தைக் காண வேண்டியிருந்தால், அவள் முடிந்த வரை அவனது வேதனையைக் குறைக்க முயல்கிறாள். படுக்கை வசதியாயிருக்கும்படி அதை ஒழுங்குபடுத்துகிறாள். தேவையான உணவும், பானமும் தருகிறாள். ஆனால் திவ்ய கன்னிகை! எத்துணை பரிதாபமான தாய் இவர்கள்! அவர்கள் சேசுவின் மரணத்தின்போது அவருடன் இருக்க வேண்டும், ஆனால் அவருக்கு எந்த உதவியும் செய்ய முடியாதவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும் என்பது தேவ நியமம். தன் திருமகன், "தாகமாயிருக்கிறேன்" என்றதை அவர்கள் கேட்டார்கள். ஆனால் அவரது தாகத்தைத் தணிக்க அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அர்ச். வின்சென்ட் ஃபெரர் கூறுவதுபோல, அவருடைய தாகத்தைத் தீர்க்க அவர்களது கண்ணீரைத் தவிர வேறு எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை!

தன் திவ்ய குழந்தை அந்தத் துயரப் படுக்கையில் மூன்று ஆணிகளில் தொங்கியபடி, எந்த விதமான இளைப்பாற்றியும், ஆறுதலும் இன்றித் தவிப்பதை மாதா காண்கிறார்கள். தன் இருதயத்தோடு அவரை அணைத்துத் தேற்ற அவர்கள் விரும்புகிறார்கள். குறைந்தபட்சம் தனது கரங்களில் அவர் மரிக்கும்படி தன் மடியில் அவரைக் கிடத்திக்கொள்ள ஏங்குகிறார்கள். ஆனால் அந்த ஆறுதலும் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. "சனங்களில் ஒருவனும் எனக்கு உதவிக்கு வராமலிருக்கையில், திராட்சை ஆலையைத் தனிமையாகவே மிதித்தேன்... என்னைச் சுற்றிலும் நான் பார்க்க, உதவிபுரிவான் ஒருவனும் கிடைக்கவில்லை; நான் தேடினும் உதவி அகப்படவில்லை" (இசை. 63:3,5) என்னும் இசையாஸின் தீர்க்கதரிசனத்தின்படி, தனக்கு ஆறுதல் தரும் ஒருவரைத் தேடியபடி, தன் பரிதாபத்திற்குரிய மகன் துயரக் கடலில் மூழ்கிக்கொண்டிருந்ததை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க மட்டும்தான் இந்தப் பரிதாபத்திற்குரிய தாயாரால் முடிந்தது!

சுற்றிலும் பகைவர்களே சூழ்ந்திருந்த அந்த வேளையில், மனிதர்களில் அவரைத் தேற்ற யார் இருந்தார்கள்? சிலுவையின்மீதும் கூட, எதிரிகள் அவரைச் சபித்து, நகையாடிக்கொண்டிருந்தார்கள். திவ்ய கன்னிகையே அர்ச். ப்ரிட்ஜத்தம்மாளிடம், "சிலர் அவரைத் திருடன் என்றும், வேறு சிலர் அவரைக் கள்ள ஞானி என்றும், இன்னும் சிலர் அவரை விட மரணத்திற்கு அதிகத் தகுதியுள்ளவன் எவனுமில்லை என்றும் சொன்னதை நான் கேட்டேன். அந்த ஒவ்வொரு வார்த்தையும் என் இருதயத்திற்கு ஒரு புதிய வியாகுல வாளாக இருந்தது" என்றார்கள்.

ஆனால், "**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்!**" என்ற அவரது வார்த்தைகள் தேவ கன்னிகைக்கு இன்னும் அதிக வேதனை தருபவையாக இருந்தன. அவர்களே அதே புனிதையிடம் கூறியபடி, இந்த வார்த்தைகள் அவர்களது வாழ்நாள் முழுவதும் ஒருபோதும் அவர்களுடைய மனதினின்று மறையவேயில்லை.

ஆயினும், இவை அனைத்தையும் விட அதிகமாக தேவமாதாவை நோகச் செய்த காரியம், தன்னையும், தன் துயரத்தையும் காண்பது, தனது திருச்சுதனின் துன்பங்களை வெகுவாக அதிகரித்தது என்பதுதான். "மாமரியின் மாசற்ற இருதயத்தை நிறைத்த வியாகுலமே கூட சேசுநாதரின் திரு இருதயத்தின் துயரக் கசப்பைப் பல மடங்காக அதிகரித்தது. **சேசுநாதர் சிலுவையின்மீது தம் சொந்த வேதனைகளால் அனுபவித்ததை விட, தம் தாயாரின் வியாகுலத்தைக் கண்டதால் அதிகத்**

**துயரம் அனுபவித்தார்''** என்று அர்ச். பெர்னார்ட் கூறுகிறார். அவரே தொடர்ந்து தேவமாதாவின் வாய்மொழியாக: "நான் அவரைப் பார்த்தேன். அவரும் என்னைப் பார்த்தார். தமக்காகத் துயரப்பட்டதை விட அவர் எனக்காக அதிகம் துயரப்பட்டார்" என்கிறார். அவர் தொடர்ந்து, "மாமரி தான் சாக அனுமதிக்கப்படாததால், மரித்தபடி உயிர் வாழ்ந்தார்கள்! சிலுவையின் அருகில் அவரது திருத்தாயார் மரித்த ஒருத்தியைப் போல வாழ்ந்துகொண்டிருந்தார்கள், உயிரோடிருந்தும் தன் திருமகனின் மரணத்தில் பங்குபெற்றார்கள். உயிர்வாழ்ந்து கொண்டே அவர்கள் மரித்தவர்களாகவும் இருந்தார்கள்'' என்கிறார்.

அவர்களது திருவாய் மவுனமாயிருந்தாலும், அவர்களது இருதயம் அப்படி இருக்கவில்லை. ஏனெனில் வியாகுல மாதா தன் திருமகனின் உயிரை நம் மீட்பிற்காக தேவ நீதிக்கு இடைவிடாமல் ஒப்புக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள். தனது வியாகுலங்களின் பேறுபலன்களைக் கொண்டு பரிசுத்த மாதா வரப்பிரசாத உயிரை நமக்குப் பெற்றுத் தருவதில் கிறீஸ்துநாதரோடு ஒத்துழைத்தார்கள். ஆகவே, நாம் அனைவரும் அவர்களது வியாகுலத்தின் பிள்ளைகளாக இருக்கிறோம். தனது வியாகுல வாள் ஏற்படுத்திய காயத்திலிருந்து தேவதாய் நம்மைப் பெற்றெடுத்தார்கள். சிலுவையின் அடியில், அந்தக் கசப்பின் கடலில், அவர்களது இருதயத்திற்கு ஆறுதலளித்த ஒரே ஒரு காரியம், தன் திருமகனின் பாடுகளும், தன் வியாகுலங்களும் நமக்கு நித்திய இரட்சணியத்தைக் கொண்டு வருகின்றன என்ற நினைவுதான். சேசுவே இது குறித்து அர்ச். ப்ரிட்ஜத்தம்மாளுக்கு, "என் மாதா, தனது இரக்கம், பிறர்சிநேகம் ஆகியவற்றின் வழியாக, பரலோகத்திலும், பூலோகத்திலும் உள்ள சகலருக்கும் தாயாராக ஏற்படுத்தப்பட்டார்கள்" என்று அறிவித்தார்.

இந்த ஆறுதலுடன்தான் அவர் மரணத்தில் தம் திருமாதாவை விட்டுப் பிரிந்தார். தம்முடைய அன்பு மக்களைத் தம்முடைய திருமாதாவின் பாதுகாவலில் விட்டுச் செல்லும் ஒரே ஒரு ஆறுதலை மட்டுமே அவர் சிலுவையின் மீது பெற்றுக்கொண்டார். அந்த நினைவு, அந்தக் கசப்பின் பெருங்கடலில் அவரது ஆத்துமத்தின் நாவை நனைத்த ஒரு துளித் தேனாக இருந்தது.

முடிவு: கத்தோலிக்கக் கிறீஸ்தவனை விட அதிகப் பேறு பெற்றவன் எவனுமில்லை. அவன் சர்வேசுரனுடைய திருமாதாவையே தன் அன்னையாகவும் கொண்டிருக்கிறான். ஆயினும், எப்போதெல்லாம் தன் ஆத்துமத்தில் பாவத்தைக் கொண்டு சேசுநாதரைச் சிலுவையில் அறைகிறானோ, அப்போதெல்லாம் அவன் இந்தத் தனது பரிசுத்த மாதாவின் ஆத்துமத்தையும் சிலுவையில் அறைகிறான். பாத்திமா செய்திகளின் தாற்பரியம் இதுவே: பிரிக்கப்பட முடியாதபடி ஒன்றாய் இணைந்திருக்கிற சேசுவின் திரு இருதயமும், மரியாயின் மாசற்ற இருதயமும் மனிதரின் பாவங்களால் ஒன்றாகவே துன்பப்படுகின்றன. மரியாயின் மாசற்ற இருதயத்தைத் துளைத்திருக்கும் பாவ முட்களைத் தனது பரிகாரச் செயல்களின் மூலம் அகற்றும் யாரும், மாமரிக்கு மட்டுமல்ல, சேசுவுக்கும் மிகுதியான ஆறுதலைத் தருகிறார்கள். எனவே, மாமரிக்கு எதிரான பாவங்களுக்குப் பரிகாரம் செய்து, சேசுவுக்கு ஆறுதலளிக்க முன்வருவோமாக! மரியாயே வாழ்க!

## கடவுளோடு நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்!

நாம் பாவத்தில் இருக்கும்போது, ஆத்துமம் முழுவதும் நோயுற்று, அழுகியிருக்கிறது. நல்ல கடவுள் அதைக் காண்கிறார் என்ற எண்ணம் அதனுள் ஆழமாக நுழைய வேண்டும். அப்போது பாவத்தில் எந்த இன்பமும் இல்லை என்று அறிவோம். கடவுளோடு நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்யுங்கள். அப்போது நிம்மதியாக உறங்குவீர்கள். இரவில் கண்விழித்திருந்தாலும், கடவுளிடம் ஜெபிப்பதில் இன்பம் காண்பீர்கள். நன்றியறிதல் எப்போதும் உங்கள் உதடுகளில் இருக்கும். ஒரு சம்மனசானவரைப் போல, மிக எளிதாகப் பரலோகத்தை நோக்கி எழுந்து செல்வீர்கள் – **அர்ச். மரிய வியான்னி அருளப்பர்.**

**தபசு காலத்தில் திருப்பாடுகளின் வரலாறு, திருப்பாடுகளின் தியானம், கிறீஸ்துநாதர் அனுசாரம், மன்ரேசா ஆகிய புத்தகங்களை வாசித்துத் தியானியுங்கள்.**

# மனிதர்களுக்கு உத்தம மாதிரிகையான அர்ச். சூசையப்பர்



அர்ச். சூசையப்பரைப் பற்றி நாம் மிகக் கொஞ்சமே அறிந்திருப்பதாக நாம் கூறலாம். ஆனால் உண்மையில், நாம் நினைப்பதை விட அதிகமாகவே அவரைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். பின்வரும் அவருடைய ஐந்து குணங்களில் நாம் அவரைக் கண்டுபாவிக்கலாம்.

*1.* **சூசையப்பர் நீதிமானாயிருந்தார்:** *பரிசுத்த சுவிசேஷம் அவரை "நீதிமான்" என்கிறது (மத்.1:19). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் பரிசுத்ததனமும், பக்தியுமுள்ளவராக, அனைத்திலும் பெரிதான இரண்டு தேவ கட்டளைகளை நிறைவேற்றி வந்த யூதராக இருந்தார். அவர் தம் முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும் தமது தேவனாகிய ஆண்டவரை நேசித்தார். அவ்வாறே அவர் தம்மைத்தாமே நேசித்தது போல, தம் அயலாரையும் நேசித்தார். அவர் ஜெபிக்கும் மனிதராகவும் இருந்தார். சங்கீதங்களை அறிந்திருந்தார். மோயீசனின் திருச்சட்டத்தை நன்கு கற்று அறிந்திருந்தார். பரிசேயர்களைப் போலன்றி, அவர் பழைய வேதப் பிரமாணத்தை அதன் வார்த்தைகளில் மட்டுமின்றி, அதன் உணர்விலும் நன்கு புரிந்து வைத்திருந்தார். அதை அனுசரிப்பதன் மூலம் அவர் தம் ஆத்துமத்தை மேன்மேலும் பரிசுத்தப்படுத்தினார்.*

*கத்தோலிக்கர்கள் என்ற முறையில், கடவுளுக்கு நம் வாழ்வில் முதலிடம் தருவதன் மூலமும், சுயநலமின்றி, நம் அயலானை நேசிப்பதன் மூலமும் நாம் அர்ச். சூசையப்பரைக் கண்டு பாவிக்கலாம். முறுமுறுப்போ, எரிச்சலோ இன்றி பரிசுத்த தாய்த் திருச்சபையின் கட்டளைகளை நாம் நிறைவேற்றலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஜெபத்தாலும், தவ முயற்சிகளாலும், பரிசுத்த வாழ்வாலும் நம்மை நாம் அவரைப் போலவே அர்ச்சித்துக்கொள்ளலாம்.*

*2.* **அர்ச். சூசையப்பர் சேசுநாதரை நேசித்தார்:** *சூசையப்பரிடம் தேவ திருச்சுதனைப் பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது எந்த மனிதனுக்கும் மேலானவராக அவரை உயர்த்துகிறது. மனிதனாய் அவதரித்த சுதனாகிய சர்வேசுரனின் மீது அவர் தந்தைக்குரிய அதிகாரத்தைக் கொண்டிருந்தார். பெத்லகேமில், அந்த நடுக்கம் தரும் குளிரில் தமது அன்பின் அரவணைப்புகளால் அவர் அவரைத் தேற்றினார். சேசு பாலனின் முதல் காலடிகளை அவர் வழிநடத்தினார்; அவரோடு சேர்ந்து ஜெபித்தார், தம் சொந்த உழைப்பால் அவருக்கு உணவும், தங்குமிடமும் அளித்தார். சேசுவை நேசிப்பதன் மூலமும், நம் வாழ்வை அவருக்கு அர்ப்பணிப்பதன் மூலமும் நாம் அர்ச். சூசையப்பரைக் கண்டுபாவிக்கலாம். நம் கரங்களின் உழைப்பைக் கொண்டு, நம் அயலாரின் வறுமையையும், துன்பத்தையும் தணிப்பதன் மூலம் நாம் அவரைக் கண்டுபாவிக்கலாம். மேலும் நம் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த தந்தையராகவும், ஆன்ம வழிகாட்டிகளாகவும் இருப்பதன் மூலமும் நாம் அவரைக் கண்டுபாவிக்கலாம்.*

*3.* **அர்ச். சூசையப்பர் மாமரியை நேசித்தார்:** *மகா உத்தமமான, தெய்வீக ஸ்திரீயின் கணவராக அவர் இருந்தார்! தம் சரீரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு தேவதூதரைப் போல் அவர் மாமரியைத் தமது கன்னிமையின் மணவாட்டியாகவும், தமது மகளாகவும், தமது தாயாகவும் நேசித்து வந்தார். அவர்களுடைய நற்பெயரையும், வாழ்வையும், உயிரையும் காப்பாற்றும்படி அவர் தம் உயிரையும் கையளிக்கத் தயாராக இருந்தார். திவ்ய கன்னிகை தன் துயரங்களிலும், களைப்பிலும்*

அவரைத் தனது தாங்குதூணாகக் கொண்டிருந்தார்கள். சேசுவின் திருப்பாடுகளின் நினைவு தன்னை வாட்டியபோதெல்லாம் சூசையப்பரின் கபடற்றதும், மகா புனிதமுள்ளதுமான அன்பே அவர்களைத் தேற்றியது. சூசையப்பர் அவர்கள் சொல்வதைக் கேட்டு நடந்தார். அவர்களுக்குத் தேவையானவற்றை சம்பாதிக்க, தமது பட்டறையில் அவர் நாள் முழுவதும் உழைத்தார். மெய்யாகவே, உலகில் வாழ்ந்த அனைவரிலும் மிகச் சிறந்த பெண்ணுக்கு, சர்வேசுரனுக்கே தாயாகவும், மகளாகவும், பத்தினியாகவும் இருந்தவர்களுக்கு, அவர் உண்மையும், பிரமாணிக்க மும் உள்ள கணவராக இருந்தார்!

தன் மனைவியை உள்ளன்போடு நேசித்து, அவளைப் பராமரித்து, தன் குடும்பம் முழுவதும் நித்திய ஜீவியத்தை அடைந்துகொள்ள அவளோடு ஒத்துழைக்கும் எந்த ஒரு கணவனும் உண்மை யாகவே அர்ச். சூசையப்பரைக் கண்டுபாவிக்கிறான்.

*4.* **அர்ச். சூசையப்பர் உழைப்பை நேசித்தார்:** உழைப்பாளர் என்பது சூசையப்பரின் மற்றொரு பெயராகவே ஆகியிருக்கிறது. தமது மனைவிக்கும், மகனுக்கும் உணவளிப்பது என்று வரும் போது, எந்த வேலையும் அவருக்குத் தாழ்மையானதாக இருக்கவில்லை. தமது வேலையையே அவர் தேவ வழிபாட்டுச் செயலாகவும், ஜெபமாகவும் ஆக்கிக்கொண்டார். தன் வேலை எதுவா யினும், அதை சேசுவின் அன்பிற்காகவும், பாவிகள் மனந்திரும்பவும், மரியாயின் மாசற்ற இருதயத் திற்கு நிந்தைப் பரிகாரமாகவும் செய்யும் யாரும் சூசையப்பரைக் கண்டுபாவிக்கிறார்கள்.

*5.* **அர்ச். சூசையப்பர் தேவ சித்தத்தை நிறைவேற்றினார்:** தம்மிடம் கேட்கப்படும் எதையும், அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், சூசையப்பர் மறு பேச்சின்றி உடனே அதைச் செய்வார் என்பதைக் கடவுள் அறிந்திருந்ததாலேயே, எளிய தச்சராகிய அவரைத் தம் திருமகனின் வளர்ப்புத் தந்தையாகவும், பரலோக, பூலோக இராக்கினியின் மணவாளராகவும் தேர்ந்துகொண்டார். நிறை மாத கர்ப்பவதியான தம் மனைவியை அழைத்துக்கொண்டு பெத்லகேமுக்குப் புறப்பட்டதிலும், தேவ திருச்சுதனின் உயிரைக் காப்பாற்ற எகிப்துக்கு ஓடிப் போனதிலும், கடவுளுக்கும், அவரது திருத்தாயாருக்கும் குடும்பத் தலைவராயிருந்தும், கடவுள் தம் மீது சுமத்தியிருந்த தரித்திரத்தை மனதார ஏற்றுக்கொண்டதிலும் அவர் தேவசித்தத்தை நிறைவேற்றினார். அந்நிய தேசம், திருக் குடும்பத்தைப் பராமரிக்க தமக்கிருந்த பொறுப்பு, எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மை என்பவை போன்ற எதுவும், உறுதியான முறையில் செயல்படுவதில் இருந்து அவரைப் பின்வாங்கச் செய்யவில்லை.

தேவ பராமரிப்புக்கு நம்மை முழுமையாக அர்ப்பணித்து, கடவுளிடமிருந்து நமக்கு வருகிற இன்ப, துன்பங்களையும், செல்வத்தையும், வறுமையையும் அவருடைய கொடைகளாக மனதார ஏற்று வாழும்போது, நாம் அர்ச். சூசையப்பரைக் கண்டுபாவிக்கிறோம்.

**முடிவு:** பூலோகத்தில் உள்ளவற்றிலேயே மிகக் கடினமான பணி அவரிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தது. அதைக் கடவுளுக்குத் திருப்தியான முறையில் அவர் நிறைவேற்றினார். பரலோகத்திலும் கூட சேசுநாதர் அவருக்குத் தந்தைக்குரிய மரியாதையும் வணக்கமும் செலுத்தி, அவரது விருப்பங் களை உடனுக்குடன் நிறைவேற்றுகிறார். அர்ச். சூசையப்பர் சேசு மரியாயின் திரு இருதயங்களில் தமக்கென ஒரு விசேஷமான இடத்தைக் கொண்டிருக்கிறார். நம் தேவைகளில் அவரைச் சார்ந் திருக்கக் கற்றுக்கொள்வோம். துன்பங்களை அல்லது பாவ சோதனைகளை எதிர்கொள்ளும் போதும், ஏதாவது நமக்குத் தேவைப்படும்போதும், சற்றும் கலக்கமின்றி, எந்தத் தயக்கமுமின்றி, முழு நம்பிக்கையோடு அவரிடம் திரும்புவோம். அப்போது அவருடைய வல்லமையும், அன்பும், அக்கறையுமுள்ள பாதுகாவலை நாம் பெற்றுக்கொள்வோம். திருநாள்: மார்ச் 19.

# அர்ச். சூசையப்பரும், ஞாயிறு பூசைக் கடமையும்

அர்ச். ஜெனவியேவ் சிறுமியாக இருந்தபோது, ஒரு கொடிய நோயால் அவதியுற்றாள். அர்ச். சூசையப்பரிடம் நவநாள் செய்யத் தொடங்கி, 17ஆம் நாளில் சுகமடைந்தாள். அன்று திவ்ய பலி பூசை கண்டு திவ்ய நன்மை உட்கொண்டபின், திவ்ய சேசுவுக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணி, அவரோடு உரையாடிக்கொண்டிருந்தபோது, அவள் ஒரு பரலோகக் காட்சியில் தனக்கு முன் அடர்ந்த மேகம் போன்ற ஒன்றைக் கண்டாள். அச்சத்தால் முகத்தை மூடிக்கொண்ட அவள் சற்று நேரத்திற்குப் பிறகு ஏறெடுத்துப் பார்க்க, பரலோக இராக்கினியான அர்ச். கன்னிமாமரி மிகுந்த மகிமையுடன் தன் அருகில் வருவதையும், "தமது ஆண்டவரின் பாதுகாவலராயிருந்தவர் (அர்ச். சூசையப்பர்) மகிமைப்படுத்தப்படுவாராக!" என்று கூறுவதையும் பார்த்தாள்.

அடுத்து, ஒரு கருப்பு நிறச் சிலுவை காணப்பட்டது. அதன் அடியில் அர்ச். சூசையப்பர் முழந்தாளிட்டிருந்தார். சிறுமியை அவர் புன்னகையோடு நோக்கினார். அதே சமயத்தில். நெருப்பு மயமான ஓர் இருதயம் அந்தச் சிலுவையின்மீது தோன்றியது. அதைச் சுற்றி ஒரு முள்முடி இருந்தது. அது சேசுவின் திவ்ய இருதயமே. சிலுவையின் உச்சியில், "**சுத்த விசுவாசம்**" என்றும், அதன் வலது கரத்தில், "**மெய்யான சிநேகம்**" என்றும், இடது கரத்தில் "**ஞாயிறு பூசை காணுதல்**" என்றும் எழுதப்பட்டிருந்தது.

அர்ச். கன்னிமாமரி மீண்டும் மிகுந்த மகிமையோடு தோன்றினார்கள். ஒளிரும் வெண்ணாடையும், தலை முதல் பாதம் வரை மூடும் வெண்முக்காடும் அணிந்து, பிரகாசமான நட்சத்திரங்களால் சூழப்பட்டிருந்தார்கள். தலையைச் சுற்றிலும் ஓர் அற்புத ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. அவர்களுக்கு அருகில் அர்ச். சூசையப்பர் தோன்றினார். அவர் நீல ஆடையும், வெள்ளை சால்வையும் அணிந்து, மகிமையொளியால் சூழப்பட்டிருந்தார். மூன்று மாதங்களுக்குப் பிறகு ஜெனவியேவ் இதே காட்சியை மீண்டும் கண்டு, அதன் பொருளை தேவமாதாவிடம் வினவ, "என் திவ்ய குமாரனின் பிரமாணிக்கமுள்ள பாதுகாவலரான அர்ச். சூசையப்பரிடம் ஜெபிப்பாயாக. மற்றவர்களும் அவரிடம் அடிக்கடி ஜெபிக்கத் தூண்டுவாயாக" என்று பரிசுத்த மாதா பதில் கூறினார்கள்.

சிலுவையில் தோன்றிய நம் ஆண்டவரின் திரு இருதயத்தில் மூன்று திருக்காயங்கள் இருந்தன. அவற்றிலிருந்து திரு இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. சிறுமி அர்ச். சூசையப்பரிடம் ஜெபிக்க, அவர் எழுந்து ஒரு துணியை எடுத்து, "சுத்த விசுவாசம்" என்று கூறி, முதற்காயத்திலிருந்து இரத்தம் வடிவதைத் தடுத்தார். வலக் கரத்தின் காயத்தின் இரத்தத்தை "மெய்யான சிநேகம்" என்று சொல்லித் தடுத்தார். அதன்பின் இடக்கரத்தின் காயத்தின் இரத்தத்தை "ஞாயிறு பூசைக் கடன்" என்று சொல்லித் தடுத்தார். திவ்ய கன்னிகை சிறுமியிடம், "நம் ஆண்டவரின் திவ்ய இருதயத்தின் மீது அர்ச். சூசையப்பருக்கு முழு வல்லமையுண்டு. ஞாயிறு கடனை அனுசரி யாததால் ஏற்படும் காயமே மற்றக் காயங்களை விட உன் திவ்ய இரட்சகருக்கு அதிக வேதனை தருகிறது" என்றார்கள்.

காட்சி மறைந்தது. நாம் அனைவரும் ஞாயிற்றுக்கிழமையை பக்தியோடு அனுசரிப்பதன் மூலம் சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதலளிக்க நம்மால் முடியும் என்று இக்காட்சியின் மூலம் நமக்கு அறிவிக்க ஆண்டவர் திருவுளமானார்.

*(அர்ச். சூசையப்பர் பொக்கிஷம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*

# நம் ஆண்டவரின் உயிர்ப்பின் மகிமைகள்



நம் ஆண்டவர் தாம் திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த்தெழுந்தருளினார்! பரலோகத்துக்கு இராக்கினியோடு நாமும் அகமகிழ்ந்து அக்களிப்போமாக. தமது உயிர்ப்பின் மூலம் அவர் மரணத்தின் மீது வெற்றி கொண்டார்; தம்மை விசுவசிப்பவர்களும், தம்மைக் கண்டுபாவித்துப் பரிசுத்தமாய் ஜீவிப்பவர்களும், இவ்வாறு தமது மீட்பின் கொடையைப் பெறத் தகுதியுள்ளவர்களாகத் தங்களை ஆக்கிக்கொண்டவர்களுமாகிய அனைவருக்கும் அவர் பரலோகத்தின் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறார்.

"அவர் மரித்தோரிடத்தினின்று உயிர்த்தெழுந்தருள வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்" என்று முதன்மை அப்போஸ்தலர்களான இராயப்பரையும், அருளப்பரையும் குறித்து சுவிசேஷம் கூறுகிறது (அரு. 20:9). மரிய மதலேனம்மாள் யாரோ சேசுநாதரின் திருச்சரீரத்தைக் கல்லறையினின்று எடுத்துச் சென்று விட்டார்கள் என்று முதலில் நினைத்தாள். இராயப்பர் பெண்கள் சொன்னதைக் கேட்டுக் குழப்பமடைந்து கல்லறைக்குத் தாமே ஓடிச் சென்று பார்த்தார். என்றாலும் இன்னும் அவர் புரிந்துகொள்ளவில்லை. கிறீஸ்துநாதரே தங்களுக்குத் தோன்றிய பிறகும், அவர் சில பதார்த்தங்களைப் புசித்து, தாம் உயிரோடு இருப்பதை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டியிருந்தது!

அவர்களுடைய இந்தக் குழப்ப நிலை ஒரு முக்கியமான பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது. இன்று நாம் கிறீஸ்துநாதரின் உயிர்ப்பைப் பற்றி நன்கு அறிந்திருந்தாலும், அந்த அறிவில் இன்னும் பலப்பட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இஸ்பிரீத்துசாந்துவானவர் தங்கள் மீது இறங்கி வரும் வரை, அப்போஸ்தலர்கள் சேசுநாதரின் உயிர்ப்பை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. நமக்கோ தேவத்திரவிய அனுமானங்கள் வழியாக இஸ்பிரீத்துசாந்துவானவரும், பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையும் இதை சாத்தியமாக்கியிருக்கிறார்கள்.

கிறீஸ்துநாதரின் உயிர்ப்பு ஓர் உண்மையான வரலாற்று நிகழ்வாகும். ஆயினும் அது காலங்களைக் கடந்து நிற்கும் ஒரு சத்தியமாகவும் இருக்கிறது. சேசுநாதர் மரித்தோரிடமிருந்து உயிர்த்தார் என்பதற்கு, அவர் வெறுமனே சில மணி நேரம் இறந்திருந்தபின், மீண்டும் உயிர்பெற்றார் என்பது அர்த்தமல்ல. அவர் தமது மரணத்திற்கு முன் வாழ்ந்த அதே வாழ்வை மீண்டும் வாழ்வதற்காக உயிர்த்தெழவில்லை. மாறாக, உயிர்த்தெழுந்தபின் அவரது நிலை ஒரு புதிய தொடக்கமாக இருந்தது. அவர் இப்போது வேறுபட்டவராக இருந்தார். அவர் இப்போது மாற்றமடைந்திருந்தார். அவரது திருச்சரீரம் இனி முதுமையடையவோ, மரிக்கவோ போவதில்லை. துன்பம், வேதனைகள், பாரம், சோர்வு என்பவை போன்ற மனித நிர்ப்பாக்கியங்கள் இனி அவருக்கு இல்லை. அவரது திருச்சரீரம் மகிமைப்படுத்தப்பட இருந்த சரீரங்களின் குணங்களைப் பெற்றிருந்தது. அது ஒளியுள்ளதாகவும், எந்த சடப் பொருளையும் ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும், தனது இயக்கத்தில் காலத்திற்கு அப்பாற்பட்டதாகவும், துன்புற முடியாததாகவும் இருந்தது. அவரது தேவ சுபாவத்தோடு உத்தமமான விதத்தில் ஒன்றித்திருக்கிற இந்த உயிர்த்த சரீரம், இனி நித்தியத்திற்கும் அவரோடு மகிமைப்படுத்தப்பட்டதாக நிலைத்திருக்கும்.

இந்த நம் ஆண்டவரின் உயிர்த்த திருச்சரீரம், அவரது உயிர்ப்பின் நிலையைப் பகிர்ந்துகொள்வதை நமக்கும் சாத்தியமானதாக்கியிருக்கிறது. இப்போது, கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளிலும், மரணத்திலும் பங்கு பெறுவதன் மூலம், அவரது உயிர்ப்பிலும் ஒரு நாள் பங்கு பெறுவோம் என்ற

நம்பிக்கை அவரது உயிர்ப்பின் மூலம் நம்மில் விதைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பங்கு பெறுதலின் பொருள் என்ன? கிறீஸ்துநாதரின் உயிர்த்த சரீரத்தின் அதே குணங்களை, மனித நிர்ப் பாக்கியத்தைக் கடந்த அதன் பாக்கிய நிலையை, நம் உயிர்த்த சரீரங்களும் கொண்டிருக்கும், அவை புத்திக்கெட்டாத அளவுக்கு மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று அர்ச். தாமஸ் அக்குயினாஸ் கூறுகிறார். துன்பம், வேதனை, மரணம் என்கிற பழையவை கழிந்து போக, சேசுவின் வழியாகப் பிதாவின் தெய்வீகத்தில் பங்குபெற்று என்றென்றும் அக்களித்திருக்க நாம் அழைக்கப்பட்டிருக் கிறோம். சேசுநாதரின் உயிர்த்த திருச்சரீரம் அவரது மரணத்தின் அடையாளங்களைத் தனது கரங்களிலும், பாதங்களிலும், திருவிலாவிலும் கொண்டிருந்தது. ஏதோ ஒரு வகையில், நாமும் இவ்வுலகில் வாழ்ந்தபோது, நம்மில் கொண்டிருந்த தேவசிநேகம் மற்றும் பிறர்சிநேகத்தின் அடையாளங்களை நம்மில் கொண்டிருப்போம். அவை நம் மகிமையாயிருக்கும்.

*முடிவு:* சேசுநாதர் பரலோகத்திலும், பூலோகத்திலும் சகல அதிகாரமும் உள்ளவராக மகிமை யோடு உயிர்த்தெழுந்தார். அவர் கடவுளாக மட்டுமின்றி, தேவ-மனிதராகவும் மகிமைப்படுத்தப் பட்டிருக்கிறார். ஆகவே சகல சம்மனசுக்களும், மனிதர்களும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக் கிறார்கள். நம் திவ்ய இரட்சகரும், நம் தந்தையும், நமது மிகச் சிறந்த நண்பருமான அவரது மகிமையைக் காண்பதில் நாம் அக்களிப்புக் கொள்கிறோம். நம்மைப் பற்றியும் நாம் அக்களிப் போமாக. ஏனெனில் சேசுநாதரின் உயிர்ப்பு நம் சொந்த உயிர்ப்பின் தவறாத வாக்குத்தத்தமாக இருக்கிறது. ஒரு நாள் ஆத்தும சரீரத்தோடு நாம் பரலோகத்தில் இருப்போம் என்னும் நம்பிக் கையை அது நமக்குத் தருகிறது. இந்த நம்பிக்கைதான் கடும் வாதைகளுக்கு மத்தியிலும் வேத சாட்சிகளின் பேரின்பமாக இருந்தது. நாமும் இதே நம்பிக்கையோடு, கடவுள் நமக்கு அனுப்புகிற சகல துன்பங்களையும் மகிழ்ச்சியோடு ஏற்று, தாங்கிக்கொள்வோமாக. இவ்வாறு, மகிமையின் அடையாளங்களை நாம் பரலோகத்திற்கென இவ்வுலகில் நம் சரீரங்களின் மீது தரித்துக்கொள் வோம். துன்புறாதவன் மகிமையின் கிரீடத்திற்கு ஆசைப்படலாகாது. பந்தயத்தில் பங்குபெறா தவன் வெற்றி வாகையைத் தேடலாகாது. ஆகவே, இந்த நம்பிக்கையைக் கொண்டு நாம் ஒருவரை யொருவர் தேற்றி, ஊக்குவித்து, அந்த அழியாத நித்திய முடியைப் பெற்றுக்கொள்ளத் துரிதப்படு வோமாக. திவ்ய கன்னிகை, பரலோகத்துக்கு இராக்கினி, நித்திய உயிர்ப்பின் மாதா, நமக்கு வழித் துணையாயிருந்து, தன் திவ்ய சுதனிடம் நம்மைக் கொண்டு போய்ச் சேர்ப்பார்களாக.

### “உத்தமதனம் அடைய என் திருப்பாடுகளைத் தியானி!”

பாலஸ்தீனத்தில் நடந்த வேதகலாபனை ஒன்றின்போது, வேத விரோதிகளால் கைது செய்யப்பட்டு, பாய்மரமோ, துடுப்போ இல்லாத ஒரு படகில் ஏற்றப்பட்டுக் கடலில் தள்ளப்பட்ட அர்ச். மரிய மதலேனம்மாளும், அர்ச். மார்த்தம்மாளும், அர்ச். லாசரும் தேவதூதர்களின் உதவியோடு மார்சேய் துறைமுகத்தை வந்தடைந்தனர். சில நாட்களுக்குப் பின் மதலேன் தன் உடன்பிறந்தவர்களை விட்டுப் பிரிந்து, ஒரு மலையிலிருந்த குகையில் தங்கி, தன் மரணம் வரை சுமார் 30 வருடங்கள் கடும் தவ வாழ்வு வாழ்ந்தாள்.

ஒருநாள் அவள் ஜெபித்துக்கொண்டிருக்கையில், ஆண்டவரிடம், “என் சேசுவே, நான் உத்தமதனம் அடைய என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்க, நமதாண்டவர் சிலுவையில் அறையுண்டவராக அவளுக்குத் தோன்றினார். அவரது திருச்சரீரம் முழுவதிலிருந்தும் திவ்ய இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவர் மிகுந்த கனிவோடு அவளை நோக்கி, “என் மகளே, நீ உத்தமதனம் அடைய விரும்பினால், மிக அடிக்கடி என் பாடுகளைத் தியானி. ஏனெனில், இந்தத் தியானம் ஆத்துமத்தில் பாவத்தின் மீது வெறுப்பையும், புண்ணிய சாங்கோ பாங்கத்தின் மீது மிகுந்த ஏக்கத்தையும் உண்டாக்க வல்லதாக இருக்கிறது” என்று அவளுக்கு அறிவிக்கத் திருவுளங்கொண்டார். பரிசுத்த ஜெபமாலையின் உன்னத வல்லமைக்கும் இதுவே காரணமாக இருக்கிறது.

# அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

## (Society of St. Pius X) உங்களை அழைக்கிறது!

"மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: நீ இராயாய் இருக்கிறாய்! இந்த இராயின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டாது" (மத்.16:18).



பரிசுத்த திருச்சபைக்குப் பசாசின் தூண்டுதலால் ஆபத்துக்கள் வரும் போது, சர்வேசுரன் அதைக் காப்பாற்ற அப்போஸ்தலர்களின் தைரியமும், பரலோக ஞானமும் உள்ள பரிசுத்த ஆன்மாக்களை எழுப்புகிறார். விசுவாசத்தை அழிக்கும் முயற்சிகள் 2-ம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டபோது, திருச்சபையையும், கத்தோலிக்க விசுவாசத்தை யும், பாரம்பரிய திவ்ய பலிபூசையையும், தேவத்திரவிய அனுமானங்களையும் பாதுகாத்து, இவ்வாறு தமது அதிமிக மகிமையையும், ஆன்ம இரட்சணியத் தையும் உறுதிப்படுத்த, வந். மார்செல் லெஃபேர் அதிமேற்றிராணியாரைத் தமது திருச்சபைக்கு ஆண்டவர் தந்தருளினார். இவர் ஏற்படுத்திய குருக்களுக்கான சபையே அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை ஆகும்.

கத்தோலிக்கக் குருத்துவத்தையும், அதைச் சார்ந்த காரியங்களையும் பாதுகாப்பதே இச்சபையின் உயரிய நோக்கம் ஆகும். சேசுநாதர்சுவாமி இக்குருத்துவத்தைப் பெரிய வியாழன் அன்று எதற்காக ஏன்படுத்தினாரோ, அதை நிறைவேற்றுவதே அந்த நோக்கம். "**இதை என் நினைவாகச் செய்யுங்கள்**" (லூக்.22:20) – இதுவே இந்தச் சபையின் சிறப்பான, உயரிய நோக்கமாகும்.

திவ்ய பலிபூசையை ஒவ்வொரு கணமும் தங்கள் வாழ்வில் வாழும் அர்ச்சியசிஷ்ட குருக்களை உருவாக்கி, கத்தோலிக்கத் திருச்சபைக்கு அளிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். எனவேதான் பாரம்பரிய திவ்ய பலிபூசை நிறைவேற்ற, அதன்படி வாழ, இன்னொரு சேசுவாக வாழ இக்குருக்கள் அழைக்கப்படு கிறார்கள். அவர்கள் இப்படி வாழ்வது மிகவும் அவசியம். அது மட்டுமே விசுவாசிகளும் அர்ச்சியசிஷ்ட தனத்தில் வளர உதவும். பூசை மட்டுமே அனைத்து வரப்பிரசாதங்களுக்கும் ஊற்றாகத் திகழ்கிறது.

நித்திய குருவான சேசுநாதரின் விசேஷ பாதுகாவலில் இச்சபை ஒப்படைக்கப்பட்டுள்ளது. குரு இன்னொரு கிறீஸ்துவாக, பலிபீடத்தில் சேசுவோடு பலியாவது இதன் சாராம்சம் ஆகும். அடுத்ததாக, நித்திய குருவின் தாயாராகிய நம் தேவ தாயைத் தனது குருக்களில் "**சேசுவை உருவாக்க**" தன் விசேஷ பாதுகாவலி யாக இச்சபை கொண்டுள்ளது. உத்தம விரதத்துவத்தின் மேன்மை மற்றும் காரணங்களை உணர்ந்து, சேசுவை மட்டுமே நேசிக்கும் இன்னொரு அர்ச். அருளப்பரை இவர்களில் தேவமாதா உருவாக்குகிறார்கள். சுருங்கக் கூறினால், நம் தாய்த் திருச்சபையை நேசிக்கும் பரிசுத்த குருக்களை உருவாக்கி, அவர்களை தேவசிநேகத்திலும், பிறர்சிநேகத்திலும் வளரச் செய்து, பூசையை மேன்மையுடன் நிறைவேற்றி, அர்ச்சியசிஷ்டதனத்தில் அவர்களை உறுதிப்படுத்துவதே வந். லெஃபேர் ஆண்டகையின் உன்னத நோக்கமாக இருந்தது; அதுவே சபையின் நோக்கமாகவும் இருக்கிறது.

சேசுவை ஆன்மாக்களிடம் கொண்டு செல்வதும், அவற்றை இரட்சிக்கும்படி அவற்றை சேசுவிடம் கூட்டி வருவதுமான ஒப்பற்ற அப்போஸ்தல அலுவலை மேற்கொள்ள விரும்பும் கத்தோலிக்க இளைஞர்கள் உறுதி யான விசுவாசத்தையும், திருச்சபையையும் காக்கவும், நவீனத்தை அழிக்கவும் உழைக்க விரும்பினால், இச்சபையின் இந்திய சிரேஷ்ட குருவை அணுகும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அனைத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிக்க!"

**The Prior, Society of St. Pius X,**
**84/3 Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002.**
**Ph: 0462 - 2586201. Email: mission.india@fsspx.asia**

இளம் கன்னியரே!

## சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதலளிக்கும் சகோதரிகளின் சபை

**(Consoling Sisters of the Sacred Heart)** உங்களை அன்புடன் அழைக்கிறது.

எங்கள் சபை, திருப்பாடுகளின் சபைக் குரு, சங். சுவாமி பெஸிலியோ ரொஸாட்டி என்பவரால் இத்தாலி யில் 1961-ம் ஆண்டு அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது. சேசுவின் திரு இருதயத்திற்கு, விசேஷமாக, அவருக்கு மிகப் பிரியமான, அவரது விலைமதிக்கப்படாத திரு இரத்தத்தால் இரட்சிக்கப்பட்ட மிக அநேக ஆத்துமங்களின் நன்றியற்றதனம், குளிர்ந்த தன்மை, நிந்தை, துரோகங்களால் கடும் வேதனைப் படுத்தப்படுகிற அந்தத் திரு இருதயத்திற்கு, ஆறுதல் தருவது என்ற ஏக்கத் தீயை அவர் எங்களில் மூட்டினார். 1996 ஆகஸ்ட் 23 அன்று தமது மரணத்திற்கு முன், சுவாமி பெஸிலியோ தம் சபையை வழிநடத்தச் சம்மதித்த அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக் குரு, சுவாமி எம்மானுவேல் த்யூ ஷலார்த் என்பவரிடம் சகோதரி களை ஒப்படைத்தார். சுவாமி எம்மானுவேல் தமது சபையோடு எங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தர, இந்தச் சபை ஒவ்வொரு நாளும் எங்களுக்காகப் பூசை நிறைவேற்றுவதன் மூலமும், புனித வேதசாஸ்திரம், நல்லொழுக்கம் மற்றும் தவ வாழ்வுக்குரிய விதிமுறைகளைக் கற்றுத் தருவதன் மூலமும் ஞான ரீதியாக எங்களை வளர்த்து வருகிறது.

2008-ல் இந்திய சகோதரிகளில் ஒருவர் இத்தாலியில் தம் வார்த்தைப்பாடுகளைத் தந்தபின், இந்தியா வுக்குத் திரும்பி வந்தார். அவர் மூலம் பாளையங்கோட்டையில் சபையின் மடம் ஒன்று தொடங்கப்பட்டது. இவ்வாறு, பாளையங்கோட்டையில் நாங்கள் எட்டு சகோதரிகளைக் கொண்ட ஒரு துறவறக் குடும்பத்தைக் கொண்டிருக்கிறோம்.

**எமது சபை நோக்கம்:** கடவுளின் மகிமையும், சகோதரிகளின் அர்ச்சிப்புமே எங்கள் பொதுக் குறிக்கோள் ஆகும். சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் தருவதும், திரு இருதய பக்தியை வளர்ப்பதும், அர்ச். மார்கரீத் மேரி அலாக்கோக் கற்பித்தபடி சேசுவின் திரு இருதயத்தை எங்கள் இருதயங்களின் ஆண்டவராக ஆக்குவதும் எங்கள் விசேஷ குறிக்கோள் ஆகும். சகோதரிகள் குருத்துவ அழைத்தலுக்காகவும், குருக்களின் அர்ச்சிப்பிற்காகவும் ஜெபிக்கிறார்கள்.

**இந்தியாவில் எங்கள் அப்போஸ்தலிக்க ஊழியம்,** அநாதைக் குழந்தைகளையும், கைவிடப்பட்ட வயோதிகப் பெண்களையும் பராமரிப்பது ஆகும். நாங்கள் முதிய, கைவிடப்பட்ட பெண்களையும், அனாதைச் சிறுமிகளையும் பராமரித்து வருகிறோம். இந்தக் குழந்தைகள் நூறு மடங்கு கனிகளைப் பிறப் பித்து, அதன் மூலம் சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் அளிக்கும்படி அவர்களது இளம் இருதயங்களில் தேவ வார்த்தையாகிய நல்ல விதையை விதைக்க நாங்கள் ஆர்வத்தோடு உழைக்கிறோம்.

கடவுளுக்கு மகிமையளிப்பதே எங்கள் முக்கிய நோக்கமாக இருப்பதால், நாங்கள் ஒவ்வொரு நாளும் கட்டளை ஜெபம் (காலை ஜெபம், மதிய ஜெபம் மற்றும் இரவு ஜெபம் ஆகியவற்றைச்) சொல்கிறோம். ஒரு மணி நேரம் தியானம் செய்கிறோம். நாங்கள் சேசுவின் திரு இருதயத்தின் ஒன்பது கட்டளை ஜெபங்களைச் சொல்கிறோம். **"சேசுவின் திரு இருதயமே, உம்மை நேசிப்பதும், நீர் நேசிக்கப்படும்படி செய்வதும்"** என்ற எங்கள் விருதுவாக்கு எங்கள் சபையின் ஒட்டுமொத்த உணர்வையும் சுருங்கக் கூறுகிறது.

தங்களைக் கடவுளுக்குக் கையளித்து, சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதல் அளிக்கவும், கன்னியர் மடத்தில் வாழவும் ஆர்வமிருப்பவர்கள் பின்வரும் முகவரியில் சபைத் தாயாரைத் தொடர்பு கொள்ளவும்:

**Sr. Mary Immaculate**, Mother Prioress,
Consoling Sisters of the Sacred Heart,
6/128 Servi Domini Orphanage,
Opp. Govt. H.S. School, Burkitmanagar - 627 351,
Tirunelveli.
Ph: 0462 2583255; Mobile: 89031 59283.



# மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஆறுதலளிக்கும் கன்னியர்கள் சபை



**(Reparation Sisters of the Immaculate Heart of Mary)**

"என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? ஜெபியுங்கள், அதிகமாக ஜெபியுங்கள். சேசு மரியாயின் இருதயங்கள் இரக்கமுள்ள திட்டங்களை உங்களுக்கென வைத்துள்ளார்கள்."

### மாமரியின் புதல்வியரே!

"நம் அன்னையின் கையில் முட்களால் சூழப்பட்ட ஓர் இருதயம் இருந்தது. அம்முட்கள் அவ்விருதயத்தை ஊடுருவிச் சென்றன. மனுக்குலத்தின் பாவங்களால் நிந்திக்கப்படும் மரியாயின் மாசற்ற இருதயம் அது."

"உன் மிகப் பரிசுத்த அன்னையின் மாசற்ற இருதயத்தின்மீது இரக்கப்படு. பரிகார முயற்சிகள் செய்து அவற்றை அகற்றுவதற்கு யாருமில்லை" என்று சேசு பாலன் லூசியாவிடம் கூறினார்.

"ஜெபியுங்கள், அதிகமாக ஜெபியுங்கள். பாவிகளுக்காக ஒறுத்தல் முயற்சிகள் செய்யுங்கள். ஏனெனில் தங்க ளுக்காக ஜெபித்து, ஒறுத்தல் செய்ய ஒருவரும் இல்லாததால் அநேக ஆன்மாக்கள் நரகத்திற்குச் செல்கிறார்கள்."

இது நம் அன்னையே நமக்கு விடுக்கும் அழைப்பு. பாத்திமா குழந்தைகளைப் போல நாமும் நம் தாயின் மாசற்ற இருதயத்தை நேசித்து, நம்மை முழுவதும் சேசு மரிய இருதயத்திற்கு அன்புப் பரிகாரமாக ஒப்புக்கொடுப்போம்.

### எமது சபையின் நோக்கம்

தூத்துக்குடி மேற்றிராசன குருவாகிய எங்கள் ஸ்தாபகர் சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்களால் எங்கள் சபை 2004-ல் தொடங்கப்பட்டு, 2013-ல் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. சேசு மரிய இருதயங்களுக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வது, குருக்களின் அர்ச்சிப்பிற்காகவும், குருத்துவ, துறவற அழைத்தல்கள் பெருகவும், தவறிப் போன குருக்கள் தங்கள் பிதாவிடம் திரும்பி வரவும், மரியா-யின் மாசற்ற இருதயம் விரைவில் வெற்றி பெறவும் ஜெபித்து, பரிகாரம் செய்வது எங்கள் சபையின் நோக்கமாகும்.

### அப்போஸ்தல அலுவல்:

சேசு மரியாயின் திரு இருதய பக்தி உலகெங்கும் பரவ ஜெபிப்பதும், குறிப்பாக, திருச்சபையின் கட்டளை ஜெபங்கள், தலை வெள்ளி, முதல் சனி பக்தி முயற்சிகளை அனுசரிப்பதும், எங்கள் பாவங்களுக்கும், சகல மனிதர்களின் பாவங் களுக்கும் பரிகாரம் செய்வதும், பாவிகள் மனந்திரும்பவும், கத்தோலிக்கப் பாரம்பரியம் திரும்பி வரவும் ஜெபிப் பதும், ஞான உபதேசம் கற்பிப்பதும், மற்றவர்களை ஜெபிக்கவும், பரிகாரம் செய்யவும் தூண்டுவதும் எங்கள் அப்போஸ்தல அலுவலாகும்.

### பிற அலுவல்கள்:

மரியாயின் ஜெபமாலை மற்றும் கார்மெல் உத்தரியம் தயாரிப்பது, பாரம்பரிய பலிபூசைக்கு உபயோகிக் கப்படும் பீடத்துணிகளைத் தயாரிப்பது.

"**நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு**" என்ற நம் அன்னையின் குரலுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களை ஆறுதல்படுத்த விரும்பும் தாராளமுள்ள இளம் உள்ளங்கள் கீழ்க்கண்ட முகவரியில் எங்களோடு தொடர்பு கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

கல்வித் தகுதி: + 2 முடித்தவர்கள், பட்டதாரிகள். (இவர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.)

வயது : 18 முதல் 35 வரை.

**எங்கள் முகவரி:**

**Mother Prioress, Reparation Sisters of the Immaculate Heart of Mary,**
**No. 18, Ravi Shankar Nagar Extension, K.T.C. Nagar, Palayamkottai, Tirunelveli - 627 011.**
**Mobile No. : 9698124004.**

# மாதா அப்போஸ்தலர்கள் சபை



**(Society of Apostles of Mary)**

**இளைஞர்களை அன்புடன் அழைக்கிறது.**

"**நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு**" என்ற பாத்திமா மாதாவின் வேண்டுகோளின்படி, கல்வாரியின் அடியில் நின்ற வியாகுல மாதாவின் மாசற்ற இருதயத்தைக் குத்தி ஊடுருவிய கொடிய வேதனைக்குப் பரிகாரமாக, அதற்கு ஆறுதலளிக்கும் நோக்கத்துடன் வாழ்வதும், அதன் மூலம் அர்ச்சிப் படைவதும், மரியாயின் மாசற்ற இருதய பக்தியைப் பரப்புவதும், நவீனமாகிய அசுத்தப் பிரளயத்திலிருந்து விசுவாசிகளைக் காப்பதும், அவர்களை மோட்சத்தை நோக்கி வழிநடத்தும்படி அநேக மாதா அப்போஸ்தலர் களை உருவாக்கி, அவர்கள் சேசு மரிய இருதயங்களுக்கு ஆறுதலளிக்கச் செய்வதுமே மாதா அப்போஸ் தலர்கள் சபையின் முதன்மையான நோக்கமாகும். இதற்காகவே 1999-ம் ஆண்டில், தூத்துக்குடி மேற்றி ராசன குருவான சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்களால் இச்சபை தொடங்கப்பட்டது. சேசு மரிய இருதயங்களை நேசிப்பதும், மற்றவர்களை நேசிக்கத் தூண்டுவதுமே இச்சபையின் குறிக்கோளாகும்.

## 1. ஜெபக் கடமைகள்:

- பாரம்பரிய திவ்ய பலிபூசையில் பங்கேற்பது;
- தினமும் கட்டளை ஜெபம் (காலை, மதியம், இரவு) ஜெபிப்பது;
- தினமும் 153 மணி (சந்தோஷ, துக்க, மகிமை தேவ இரகசியங்கள்) முழு ஜெபமாலை ஜெபிப்பது;
- தினமும் காலையில் 30 நிமிடங்கள் தியானம் செய்வது.

## 2. மற்ற கடமைகள்:

- மாதா பரிகார மலர் பத்திரிகையை வெளியிடுவது (இரு மாதங்களுக்கு ஒரு முறை);
- பாரம்பரிய கத்தோலிக்கப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது (ஆன்மீகம், ம>ந்றயதா, அர்ச்சியசிஷ்டவர்கள் மற்றும் கத்தோலிக்க ஞான உபதேசப் புத்தகங்களை வெளியிடுவது.);
- சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஞான உபதேசம் கற்பிப்பது;
- தலைவெள்ளி, முதல் சனி பக்தியைக் கடைப்பிடிப்பது, பரப்புவது;
- ஆண்களையும், பெண்களையும் அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் முறைப்படி 33 நாள் தயாரிப்பைச் செய்ய உதவி செய்து, அவர்களை மாதா அப்போஸ்தலர்களாக உருவாக்குவது;
- சேசு மரிய இருதயங்களுக்கு நிந்தைப் பரிகாரம் செய்யத் தூண்டுவது.

**தேவமாதா வழியாக:**

"உன் சர்வேசுரனாகிய ஆண்டவரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் சிநேகிப்பாயாக. உன் பிறனையும் உன்னைப் போலவே நேசிப்பாயாக" என்னும் ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்றுவது.

முழு ஆர்வமும், உடல் தகுதியும் உள்ள யாரும் கீழ்க்கண்ட முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

## SOCIETY OF APOSTLES OF MARY

| | |
|---|---|
| C/o Rev. Fr. Prior, Society of St. Pius X<br>84/3, Annie Nagar, Seevalaperi Road,<br>Palayamkottai - 627 002.<br>Ph: 0462 - 2586201<br>Email: mission.india@gmail.com | 11/519, Sahayamatha Pattanam, 2nd Street,<br>Tuticorin - 628 002.<br>Ph: 0462 2361989.<br>Mobile: 94876 09983, 94872 57479.<br>Email: tutirosamystica@gmail.com |

# அறிந்துகொள்வோம் பாத்திமா செய்தியை!

## தேவமாதாவின் முதல் காட்சி (தொடர்ச்சி)



*"**கடவுளின் வரப்பிரசாதம் உங்களைத் தேற்றும்**" என்று கூறியபடி மாதா முதல் தடவையாகத் தன் கரங்களை விரித்து, அவற்றிலிருந்து வெளிவந்த ஓர் ஒளியை எங்கள் மீது பாயச் செய்தார்கள். அது எவ்வளவு தீவிரமானதாக இருந்ததென்றால், அது எங்கள் இருதயங் களையும், எங்கள் ஆத்துமங்களின் உள்ளாழங்களையும் கூட ஊடுருவி, மிகச் சிறந்த கண்ணாடிகளில் எங்களையே நாங்கள் காண்பது போல, அந்த ஒளியாகவே இருந்த கடவுளில் நாங்கள் இருப்பதை மிகத் தெளிவாகக் காணச் செய்தது!"*

குறிப்பு: திவ்ய கன்னிகையைப் பற்றிய மனித புத்திக்கெட்டாத காரியங்கள் லூசியாவின் இந்த வார்த்தைகளில் பரம இரகசிய முறையில் வெளிப்படுத்தப்படுவதைக் காணுங்கள்! தேவமாதாவின் திருக்கரங்களிலிருந்து குழந்தைகளின் மீது பாய்ந்த ஒளி கடவுளாகவே இருந்தது என்று அவள் கூறுகிறாள்! சென்ற இதழில், "அமல உற்பவியா, அமல உற்பவமா?" என்ற கட்டுரையில், மகா பரிசுத்த கன்னிகை இஸ்பிரீத்துசாந்துவின் தெய்வீகத்தில் முழுமையாகப் பங்கு பெறுவது, திருச் சுதனின் மனிதாவதாரத்திற்கும், அதனால் நிறைவேற இருந்த மனித இரட்சணியத்திற்கும் எவ்வளவு இன்றியமையாததாக இருந்தது என்று தியானித்தோம். அந்த நம் வாதம் இங்கே லூசியாவால் உறுதிப்படுத்தப்படுகிறது. "பூர்வீகத்தில் பலமுறைகளிலும், பலவிதமாகவும் தீர்க்கதரிசிகளைக் கொண்டு நம் பிதாக்களோடு பேசியவரும், (புதிய ஏற்பாட்டுக் காலத்தில்) தம் சுதனைக் கொண்டும் நம்மோடு பேசியவருமான சர்வேசுரன்" (எபி. 1:1,2), மரியாயின் யுகமாகிய இந்த இறுதிக் காலத்தில் தமது திருத்தாயாராகிய மகா பரிசுத்த கன்னி மாமரியின் வழியாக நம்மோடு பேசத் திருவுளங்கொண்டிருக்கிறார். இன்னும் மேலாக, நம் புத்திக்குப் புலப்படாத முறையில், மாமரி யின் வழியாகத் தம்மையே நமக்குத் தர அவர் சித்தங்கொண்டிருக்கிறார். சர்வேசுரனாயிருந்த அவரை இந்த மகா பரிசுத்த ஸ்திரீதான் தனது மனித சுபாவமாகிய ஆடையால் உடுத்தி, நமது பரிகாரப் பலியாயிருக்கும்படி நமக்குத் தந்தார்கள். இந்த இறுதிக் காலத்தில் அதே பரிசுத்த ஸ்திரீ தான் மீண்டும் அவரை நமக்குத் தருபவர்களாக இருக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன.

மேலும், திவ்ய கன்னிகை இக்காலத்தில் கடவுளோடு நம்மை ஒன்றாகப் பிணைக்கும் உன்னத மான தேவ கருவியாகவும் இருக்கிறார்கள் என்பதை "அந்த ஒளியாகவே இருந்த கடவுளில் நாங்கள் இருப்பதை மிகத் தெளிவாகக் காணச் செய்தது!" என்ற வார்த்தைகள் நிரூபிக்கின்றன. திவ்ய கன்னிகைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆன்மா, அவர்களது தெய்வீக ஒளியில் தனது ஒன்றுமில்லாமையையும், தனது பாவ அசுத்த நிலையையும், "மிகச் சிறந்த கண்ணாடிகளில் எங்களையே நாங்கள் காண்பது போல" காணச் செய்து, இரட்சிக்கப்பட, மாமரியின் வழியாக, தான் கடவுளோடு ஒன்றித்திருக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்கிறது! இந்த ஒன்றிப்பிற்காகப் பிரயாசைப்படும்படி அவர்களாலேயே அது தூண்டப் படுகிறது.

*மேலும், அறுபது ஆண்டுகளுக்கு முன், உலகம் முழுவதும் அனுதினமும் இலட்சக்கணக்கில் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்த "தினகால பலியாகிய" மெய்யான திவ்ய பலிபூசை நீக்கப் பட்டு, அதன் இடத்தில் அருவருப்புக்குரிய நாசம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, "தினகாலப் பலிக் குரிய பரிசுத்த ஸ்தலமும் பங்கப்படுத்தப்பட்டு" (தானி. 8:11), பிரமாணிக்கமுள்ள குருத்துவ ஆன்மாக்களால் நிறைவேற்றப்படும் வெறும் ஓரிரு ஆயிரம் பூசைகளாக அது குறைக்கப்பட்டுள்ள இந்த இறுதிக் காலத்தில், "மாமரியின் வழியாகக் கடவுளை ஆத்துமம் பெற்றுக்கொள்ளுதல்" என்னும் பாத்திமா வாக்கியம் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இனி, காட்சி தொடர்கிறது:*

*"அதன்பின் எங்களுக்குள் தூண்டப்பட்ட ஓர் உள்ளுணர்வின் காரணமாக நாங்கள் முழந் தாளில் விழுந்து,* "**ஓ மகா பரிசுத்த தமத்திரித்துவமே, உம்மை ஆராதிக்கிறேன். என் தேவனே, என் தேவனே, மிகப் பரிசுத்த திவ்ய சற்பிரசாதத்தில் உம்மை நேசிக்கிறேன்**" *என்ற ஜெபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தோம்."*

*குறிப்பு: ஆயினும், திவ்ய கன்னிகை திவ்ய நற்கருணையில் இருக்கும் தன் திருக்குமாரனை நாம் தொடர்ந்து ஆராதிக்கவும், அவரை நேசிக்கவும் வேண்டுமென்று நம்மை இந்த ஜெபத்தின் மூலம் வற்புறுத்துகிறார்கள். இன்று திவ்ய பலிபூசை திருச்சபையின் பலிபீடங்களில் இருந்து மிகப் பெருமளவுக்கு அகற்றப்பட்டிருந்தாலும், ஒரு நாள் முன்பை விட அதிக மகிமையோடு அது தன் எதிரிகளின் மீது வெற்றிகொண்டு, மீண்டும் நமது தேவாலயங்களில் ஸ்தாபிக்கப்படும். அன்று, அது, அவர் விரும்புகிற விதத்தில் விசுவசிக்கப்படும், ஆராதிக்கப்படும், நம்பப்படும், நேசிக்கப் படும்! காட்சி தொடர்கிறது:*

*இந்த முதல் கணங்கள் கடந்த பிறகு, நம் மாதா தொடர்ந்து:* "**உலக சமாதானத்திற்காகவும், போர் முடிவடையவும் ஒவ்வொரு நாளும் ஜெபமாலை சொல்லுங்கள்**" *என்றார்கள்.*

*"இந்தப் போர் இன்னும் நீண்ட காலம் நடக்குமா, அல்லது சீக்கிரம் முடிந்து விடுமா என்பதைச் சொல்வீர்களா?"*

"**நான் என்ன விரும்புகிறேன் என்பதை இன்னும் உங்களுக்குக் கூறாததால், போர் முடிவு பற்றியும் இப்போது என்னால் கூற முடியாது.**"

*இதன்பின் அவர்கள் மேலெழும்பி கீழ்த்திசை நோக்கிச் சென்று ஆகாயப் பெருவெளியில் மறைந்தார்கள்." (பாத்திமா மாதாவின் முதல் காட்சி முடிவுற்றது.) (தொடரும்)*

### பரிசுத்த ஜெபமாலையில் சேசுவின் திருப்பாடுகளை தியானிப்போம்!

"ஜெபமாலை மகா அற்புதமான ஜெப வடிவமாகவும், நித்திய ஜீவியத்தை அடைந்துகொள்ள மிகவும் பயனுள்ள வழியாகவும் இருக்கிறது. அது நமக்கு எதிரான சகல தீமைகளுக்கும் தீர்வாகவும், நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய சகல தேவ ஆசீர்வாதங்களுக்கும் வேராகவும் இருக்கிறது. தினமும் ஒன்றுகூடி ஜெபிக்கும் குடும்பத்தைத் தீமை அணுகாது. (திவ்ய பலிபூசைக்குப் பிறகு) ஜெபமாலையை விட அதிக அற்புதமான ஜெப முறை வேறு ஏதுமில்லை" – **பாப்பரசர் பதின்மூன்றாம் சிங்கராயர்.**

எந்தக் காலத்திலும் கடவுளோடு ஆத்துமத்தை ஒன்றிணைக்க வல்லதாக இருக்கிற பரிசுத்த ஜெபமாலை, விசேஷமாக, தபசு காலமாகிய இந்த நம் ஆண்டவரின் திருப்பாடுகளின் காலத்தில், நம் ஆத்துமங்களில் உத்தம மனஸ்தாபத்தையும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, பாவத்தை விட்டு விலகி, புண்ணியங்களைச் செய்து, இவ்வாறு தேவசிநேகத்தில் வளர்வதற்கான ஆர்வத்தையும் தருகிறது. எனவே, இந்தத் தபசு காலத்தில், வழக்கத்தை விடக் கூடுதலாகவும், ஆழ்ந்த தியானத்தோடும் ஜெபமாலை ஜெபித்து, குறிப்பாக சேசுநாதரின் திருப் பாடுகளை அதிகமாக தியானித்து, அது தரும் ஞான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளப் பிரயாசைப்படுவோமாக!

# அறிந்துகொள்வோம் கத்தோலிக்க வேத சத்தியங்களை!

## 1. திவ்ய பலிபூசை (தொடர்ச்சி)

*பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபை, தனது திரிதெந்தின் பொதுச் சங்கத்தில், திவ்ய பலிபூசை பற்றிப் பின்வருமாறு நமக்குப் போதிக்கிறது:*



*“லேவிய குருத்துவத்தின் பலவீனத்தின் காரணமாக, அதன் பலிகள் சம்பூரணமானவையாக இருக்கவில்லை” (எபி. 7:11,18) என்பதால், மெல்கிசெதேக்கின் முறைப்படி மற்றொரு குருவைக் இரக்கங்களின் பிதாவாகிய கடவுள் ஏற்படுத்துவது அவசியமானதாக இருந்தது. இதற்காக அவர் நம் ஆண்டவராகிய சேசுநாதரை நித்திய குருவாக ஏற்படுத்துவார்; இவரோ, இப்பலியை நிறைவுபெறச் செய்து, அர்ச்சிக்கப்பட வேண்டிய அனைவரையும், உத்தம ஜீவியத்தை நோக்கி வழிநடத்துவார். ஆகவே, நம் தேவனும், ஆண்டவருமான அவர், தம் மரணத்தின் வழியாக பிதாவாகிய சர்வேசுரனுக்கு சிலுவைப் பீடத்தின்மீது நித்திய இரட்சணியப் பலியாகத் தம்மையே ஒரு முறை ஒப்புக்கொடுக்க இருந்தார்.*

*“என்றாலும், அவரது மரணத்தோடு அவரது குருத்துவம் முடிந்துபோகக் கூடாததாக இருந்ததால், தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், முன்னறிவிக்கப்பட்ட மெல்கிசெதேக்கின் முறைப்படியான குருவாக அவர் தம்மையே வெளிப்படுத்தி, பிதாவாகிய சர்வேசுரனுக்கு, அப்ப, இரச குணங்களுக்குள் தமது சொந்த சரீரத்தையும், இரத்தத்தையும் ஒப்புக்கொடுத்தார். இதே பலிப் பொருட்களின் வெளித் தோற்றத்தின் கீழ் அவர் தம் சொந்த சரீரத்தையும், இரத்தத்தையும், புதிய ஏற்பாட்டின் குருக்களாகத் தாம் அதே நாளில் ஏற்படுத்திய தம் அப்போஸ்தலர்களுக்கு உணவாகவும், பானமாகவும் தந்தார். மனித சுபாவத்திற்குத் தேவைப்படுகிறபடி, தமது நேசத்திற்குரிய மணவாளியாகிய திருச்சபைக்கு, காணக்கூடிய ஒரு பலியை அவர் விட்டுச் சென்றார். இதன்படி,* **சிலுவையின் மீது ஒரு முறை நிறைவேற்றப்பட வேண்டியிருந்த இரத்தப் பலி, உலக முடிவு வரை தொடர்ந்து இரத்தம் சிந்தாத பலியாகத் திருச்சபையின் பலிபீடங்களின்மீது நிறைவேற்றப்படும்படியாகவும், அதன் நினைவு உலக முடிவு வரை நிலைத்திருக்கும்படியாகவும், நாம் தினமும் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்குப் பரிகாரமாக, அதன் மிகுதியான பேறுபலன் கடவுளுக்குச் செலுத்தப்படும்படியாகவும், அவர் பூசைப் பலியை உண்டாக்கினார்.** *“என் நினைப்புக்காக இதைச் செய்யுங்கள்” (லூக். 22:19) என்ற வார்த்தைகளைக் கொண்டு, அவர் தம் அப்போஸ்தலர்களை இந்தக் குருத்துவத்தில் தமது ஸ்தானாதிபதிகளாக ஏற்படுத்தி, இந்தப் பலியைத் தொடர்ந்து நிறைவேற்ற அவர்களுக்குக் கட்டளையிட்டார்” (திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் 22-ம் அமர்வு, அத். 1).*

*கிறீஸ்துநாதர் அப்பத்தையும், இரசத்தையும் தம் திருச்சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றியது மட்டுமின்றி, அவர் அவைகளைப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு உன்னத பலியாகவும்*

ஒப்புக்கொடுத்து, தமது சொந்த ஆளுமையில் புதிய ஏற்பாட்டுப் பலியையும் ஸ்தாபித்து நியமம் செய்தார். மெல்கிசெதேக்கின் முறைமைப்படி தம்மை ஒரு குருவாக ஸ்தாபிப்பதற்காகவும் அவர் இப்படிச் செய்தார். இந்த மெல்கிசெதேக்கைப் பற்றிப் பரிசுத்த வேதாகமம்: "சாலேமின் இராஜாவும், உன்னதக் கடவுளின் குருவுமாயிருந்த மெல்கிசெதேக் அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் கையில் ஏந்தி வந்து, அபிராமை ஆசீர்வதித்தார்" (ஆதி.14:18) என்கிறது. தாவீதரசரோ, "நீர் என்றென்றும் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி குருவாயிருக்கிறீர் என்று ஆண்டவர் ஆணையிட்டார்" என்கிறார் (சங்.109:4).

ஆபிரகாமும், முற்காலத்தில் மெய்யான தேவனை ஆராதித்த மற்றவர்களும் செய்தது போல, மெல்கிசெதேக் மிருகங்களை பலியாக ஒப்புக்கொடுக்கவில்லை. மாறாக, இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலின்படியும், அக்கால வழக்கத்திற்கு எதிராகவும் செயல்பட்ட அவர், சில ஜெபங்களையும், சடங்குகளையும் கொண்டு அப்ப, இரசத்தை அர்ச்சித்து, அவற்றை எழுந்தேற்றம் செய்து, கடவுளுக்கு உகந்த பரிசுத்த பலியாகக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார். இவ்வாறு, அவர் சேசுவுக்கு மாதிரிகை ஆனார், அவரது காணிக்கை, புதிய உடன்படிக்கையின்கீழ் சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தம் சிந்தாத பலிக்கு மாதிரிகையாக ஆனது. பிதாவாகிய சர்வேசுரன் பலி மிருகங்களைக் கொன்று பலி ஒப்புக்கொடுத்த ஆரோனின் முறைப்படியல்லாமல், அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த மெல்கிசெதேக்கின் முறைமையின்படியே தம் திருச்சுதனைப் பெரிய குருவாக ஏற்படுத்தினார்.

கடைசி இராப்போஜனத்தின்போது, அவர் அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, தம் சீடர்களிடம்: "**இதை வாங்கிப் புசியுங்கள்; இது என் சரீரமாயிருக்கிறது**" என்றபோதும் (மத்.26:26), அப்படியே அவர் திராட்சை இரசமிருந்த கிண்ணத்தை எடுத்து, ஆசீர்வதித்துத் தம் சீடர்களுக்கு அளித்து, "**நீங்கள் எல்லாரும் இதிலே பானஞ்செய்யுங்கள். ஏனெனில் இது பாவங்களின் பொறுத்தலி னிமித்தம், அநேகருக்காகச் சிந்தப்படும் புதிய உடன்படிக்கையின் என் இரத்தமாயிருக்கின்றது...** இதை என் நினைப்புக்காகச் செய்யுங்கள்" என்று கூறியபோதும் (மத். 26:27,28; லூக்.22:19), அவர் தம் குருத்துவத்தைச் செயல்படுத்தினார்.

திரிதெந்தின் பொதுச் சங்கம் மீண்டும்: "சேசுநாதர் கடைசி இராப்போஜனத்தில், அப்ப, இரச குணங்களுக்குள் தம் திருச்சரீரத்தையும், இரத்தத்தையும் பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒப்புக் கொடுத்ததோடு, "இதை என் நினைப்புக்காகச் செய்யுங்கள்" என்றபோது, அவர் தமது அப்போஸ் தலர்கள் மற்றும் அவர்களது ஸ்தானாதிபதிகளுக்கு குருத்துவத்தை அளித்து, இந்த அடையாளங் களின் கீழ் தமது திருச்சரீரத்தையும், இரத்தத்தையும் தொடர்ந்து ஒப்புக்கொடுத்து வருமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டார். எல்லா இடங்களிலும், தமது திருநாமத்திற்கு ஒப்புக்கொடுக் கப்பட வேண்டுமென்று மலாக்கியாஸ் தீர்க்கதரிசியின் வழியாக ஆண்டவர் முன்னுரைத்த பரிசுத்த பலி இதுவே" என்று கற்பிக்கிறது (அமர்வு 22, அத்.1).

ஆகவே, திவ்ய பலிபூசை என்பது, தமத்திரித்துவ சர்வேசுரனுக்கு மகிமையாகவும், அவர் நமக்குச் செய்துள்ளவையும், உலக முடிவு வரை செய்ய இருப்பவையுமான சகல நன்மைகளுக்கும் நன்றியறிதலாகவும், நம் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், நம் தேவைகளைப் பெற்றுக்கொள் வதற்கான வாய்க்காலாகவும், கிறீஸ்துநாதரின் உன்னத குருத்துவத்தில் பங்குபெற்றுள்ள அவரது குருக்கள் அப்ப, இரச வடிவத்தில், பலிபீடத்தின்மீது நிறைவேற்றி பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிற சேசுநாதருடைய திருச்சரீரத்தினுடையவும், திரு இரத்தத்தினுடையவும் உன்னத தெய்வீகப் பலியாக இருக்கிறது என்பதே நம் விசுவாசம். (தொடரும்.)

# மங்கள வார்த்தை திருநாள் தியானங்கள்



தீர்க்கதரிசிகள் அறிவித்திருந்தபடி, மெசையாவின் வருகைக் காலம் நிறைவேறியபோது, சர்வேசுரன் கபிரியேல் தூதரைத் திவ்ய கன்னிகையிடம் அனுப்பினார். தேவதூதர், "பிரியதத்தத்தினால் பூரணமானவளே, வாழ்க! கர்த்தர் உம்முடனே!" என்று தம் இராக்கினியை வாழ்த்துகிறார். பிரியதத்தம் என்பது சர்வேசுரன் மனிதருக்குத் தாமே விரும்பித் தந்தருளுகிற தேவ இஷ்டப்(பிரிய) பிரசாதம்; இந்த மேலான தெய்வீகக் கொடையால் திவ்ய கன்னிகை பரிபூரணமாக நிரப்பப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவிப்பதன் மூலம், தமது தூதரின் வழியாக சர்வேசுரன் நம் திவ்ய மாதாவின் மகா பரிசுத்த அமல உற்பவத்தை அறிக்கையிடுகிறார். அமல உற்பவம் என்பது ஆத்துமத்தின் கன்னிமை! ஜென்மப் பாவம், கர்மப் பாவங்கள் என்னும் காரணத்தால் கடவுளுக்குத் தங்கள் பிரமாணிக்கத்தை இழந்து கறை பட்டிருக்கிற மனுக்குலத்தின் அசுத்தத்திலிருந்து திவ்ய கன்னிகை பரிபூரணமாகப் பாதுகாக்கப் பட்டு, **தன் திவ்ய பத்தாவாகிய தேவ இஸ்பிரீத்துவானவருக்கே முழுவதும் சொந்தமாயிருக்கிறார்கள் என்பதையே நாம் தேவமாதாவின் அமல உற்பவம் என்கிறோம்.** மங்கள வார்த்தை திருநாள் திவ்ய கன்னிகையின் அமல உற்பவத்தை நினைவுகூரும் திருநாளாகவும் இருக்கிறது.

தேவதூதர் தொடர்ந்து: "மரியாயே, தேவரீர் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர்; உமது திருவுதரத்தில் கருத்தரித்து ஒரு குமாரனைப் பெறுவீர்; அவருக்கு சேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்; அவர் சர்வேசுரனுடைய குமாரனாயிருப்பார்" (லூக். 1:30) என்ற மனிதாவதாரத்தின் மாபெரும் செய்தியை திவ்ய கன்னிகைக்கு அறிவிக்கிறார். முதலில், அவர்கள் மனுக்குலத்தால் நீண்ட காலமாய் எதிர்பார்க்கப்பட்டிருந்த மெசையாவுக்குத் தான் தாயாகப் போகிற மகா உன்னத மகத்துவத்தைப் பற்றிய செய்தியால் தாக்கப்படுகிறார்கள். அது ஏறக்குறைய அளவற்றதாக இருக்கிற அவர்களுடைய தாழ்ச்சியின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாக இருக்கிறது.

ஆயினும், பிள்ளைப்பேறு அதையும் விட அதிகமாய் அவர்களைத் தாக்குகிறது. தன் ஆத்துமத் தின் கன்னிமையால் தான் யாருக்குச் சொந்தமாயிருக்கிறார்களோ அந்த தேவ ஆவியானவருக்குத் தான் அர்ப்பணித்திருந்த சரீரக் கன்னிமைக்கு இதன் மூலம் பங்கம் வரக்கூடுமோ, ஆயினும் இதுதான் ஒருவேளை சர்வேசுரனுடைய திருச்சித்தமாயிருக்குமோ என்று மகா பரிசுத்த கன்னிகை கலங்குகிறார்கள். "இது எப்படியாகும்? நானோ புருஷனை அறியேனே!" என்ற மகா உன்னதக் கன்னிகையின் வார்த்தை இதை உறுதிப்படுத்துகிறது. ஆம், பரிசுத்த கன்னி மாமரி தன் சரீரக் கன்னிமையாலும் தன் தெய்வீகப் பத்தாவுக்கு மட்டுமே சொந்தமாயிருக்கிறார்கள். தனது திவ்ய கர்ப்பம் அதே இஸ்பிரீத்துசாந்துவானவரின் வல்லமையால் மட்டுமே நிகழ இருக்கிறது என்ற செய்தி யைக் கேட்டபின்தான் அவர்கள் அளவற்ற சந்தோஷமும், மனச் சமாதானமும் அடைகிறார்கள்.

இவ்வாறு நாசரேத்தின் அதிபரிசுத்த மரியம்மாள் தனது அமல உற்பவத்தால் தனது ஆத்துமத் திலும், தனது சொந்த அர்ப்பணத்தாலும், அதற்குக் கடவுள் தந்தருளிய ஆதரவாலும், தனது சரீரத் திலும் கன்னிமையுள்ளவர்களாக இருந்தார்கள். சர்வேசுரன் தமது சகல வரப்பிரசாதங்களையும் அவர்களுடைய ஆத்துமத்தில் பொழிய அதில் எந்த ஒரு தடையும் இராததால், அது அளவற்ற விதமாய் நிரம்பி வழியும் அளவுக்கு அவரால் அவர்களுடைய ஆத்துமத்தில் நிரப்பப்படுகிறது.

*இந்த ஆத்தும, சரீரக் கன்னிமையின் மூலம் திவ்ய கன்னிகை சர்வேசுரனுக்குத் தாயாக இருக்கத் தகுதி பெற்றார்கள். சர்வேசுரன் தனக்கு மாத்திரமே தந்தருளியிருக்கிற இந்த மகா உன்னதக் கொடைகளை மாமரி உள்ளபடியே தெளிவாகப் புரிந்துகொண்டு, தேவ சித்தத்தைத் தனது திருவயிற்றின் கனியானவரோடு சேர்ந்து முழுமையாக நிறைவேற்றுமாறும், உலகில் இரட்சணிய அலுவல் தொடங்குமாறும், தேவதூதருக்கு இவ்வாறு பதிலளிக்கிறார்கள்: "இதோ, ஆண்டவருடைய அடிமையானவள்; உம் வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" (லூக்.1:38). இந்த அதிசய வார்த்தைகள் உச்சரிக்கப்பட்ட அதே கணத்தில், இதோ,* **"வார்த்தையானவர் மாம்சமானார்!" தேவ திருச்சுதன் இதே கணத்தில் மாமரியின் திருமகனுமானார்.** *இந்தப் பதிலில் வெளிப்படும் திவ்ய கன்னிகையின் தாழ்ச்சி ஆச்சரியமானது. கடவுளுக்கே தாயாராகும் உன்னத மகத்துவத்தின் மேன்மை பற்றிய முழுமையான ஞான வெளிச்சம் அவர்களுக்குத் தரப்பட்டபோதிலும் கடவுளின் பார்வையில் ஓர் அடிமையாக மட்டுமே அவர்கள் தன்னைக் காண்கிறார்கள்.*

**முடிவு:** *இவ்வாறு மங்கள வார்த்தை திருநாள் அதிபரிசுத்த மரியம்மாளின்* **அமல உற்பவம், நித்திய கன்னிமை, தெய்வீகத் தாய்மை** *என்னும் மூன்று வரப்பிரசாத சலுகைகளை நாம் போற்றிக் கொண்டாடும் உன்னத மகிழ்ச்சி நிறைந்த திருநாளாயிருக்கிறது. தேவ திருச்சுதனின் மனிதாவதாரத்தையும், அதன் மூலம் இரட்சணிய வரலாற்றையும் தொடங்கி வைத்தவர்களும், பலிச் செம்மறியானவரைப் புத்திக்கெட்டாத அன்போடு வளர்த்து, நம் மீட்பிற்காக அவரையும் பலியாக்கி, தானும் அவரோடு சேர்ந்து பலியானவர்களுமாகிய திவ்ய கன்னிகை, மனுக்குலத்தின் பெரும் பாக்கியமான நம் பரிசுத்த மாதா, என்றென்றும் ஸ்துதிக்கப்படுவார்களாக! திருநாள்: மார்ச் 25.*

## பாவசங்கீர்த்தனம் வெட்கத்திற்குரிய காரியமல்ல!

பாவம் செய்ய வெட்கப்படாத ஒரு பாவி, அதைக் கழுவிப் போக்குகிற பாவசங்கீர்த்தனத்தில் தன் பாவங்களை அறிக்கையிட வெட்கப்படுவதில் அர்த்தமில்லை! பாவங்களை ஒரு குருவிடம் வெளிப்படுத்துவதில் வெட்கப்பட ஏதுமில்லை. அவர் தம் அருகில் முழந்தாளிட்டிருக்கிற பாவியின் மட்டில் தயாளமுள்ளவராக இருக்கிறார்; பாவசங்கீர்த்தனம் செய்ய அவர் கனிவுடன் அவனுக்கு உதவுகிறார்! மிகுந்த அன்போடு அவனை ஊக்குவிக்கிறார், ஞானத்தோடு அவனைக் கண்டிக்கிறார்.

மனஸ்தாபத்தோடு தம்மிடம் பாவசங்கீர்த்தனம் செய்யும் பாவியின் பாவங்கள் எவ்வளவு கனமானவையாக இருந்தாலும், அவற்றைக் கேட்டு அவர் ஒரு கணம் முதலாய் அருவருப்படைவதில்லை. மாறாக, தமது ஆத்துமத்தின் உள்ளாழத்தில் இவ்வளவு பாவியாயிருக்கிற ஓர் ஆன்மாவை மீட்டு இரட்சிக்கக்கூடிய வரப்பிரசாதத்தைத் தந்ததற்காக அவர் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார்.

குருவானவர் பீடத்தினருகில் கடவுளோடு இருப்பதும், பாவசங்கீர்த்தனத் தொட்டியில் மனஸ்தாபமுள்ள பாவியோடு இருப்பதுமான தருணங்களே அவருடைய வாழ்வின் மிக மகிழ்ச்சியான சமயங்களாகும். கடவுள் அவருடைய இருதயத்தில், அவரிடம் வருகிற பரிதாபத்திற்குரிய பாவிகளின் மீதான ஒரு நேசத்தையும், பாசத்தையும் விதைக்கிறார். அது ஏறக்குறைய தாய் தன் குழந்தையிடம் கொள்ளும் பாசத்திற்குச் சமமானது.

(பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம் என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## பரிசுத்த பாப்பரசருக்காக வேண்டிக்கொள்வோம்!

உயிருக்கு ஆபத்தான முறையில் நோயுற்று, தீவிர சிகிச்சை பெற்று வரும் நம் பரிசுத்த பிதா பாப்பரசர் விரைவில் பூரண நலம் பெறும்படியாகவும், அவருடைய ஆத்தும நலனுக்காகவும் வேண்டிக்கொள்வோமாக. கர்த்தர் அவரை ஆதரித்துப் பாதுகாத்து, அவருடைய பாவங்களிலிருந்து அவரை இரட்சித்துக்கொள்வாராக!

# கத்தோலிக்க குருத்துவத்தின் மேன்மை



*சேசுநாதர் முதன்முதலில் ஏற்படுத்திய தேவத் திரவிய அனுமானம் திவ்ய நற்கருணை; ஆயினும், அவரே முதல் குருவாயிருந்து, திவ்ய நற்கருணையை ஏற்படுத்தினார் என்ற வகையில் குருத்துவம் முதல் தேவத்திரவிய அனுமானம் என்று அழைக்கப்படத் தகுதியுள்ளதாக இருக்கிறது. இந்தத் தேவத் திரவிய அனுமானத்தைப் பெற்றுக் கொள்ள இருந்தவர்களுக்கு அவர் மூன்று முக்கியமான அதிகாரங்களை வாக்களித்தார். அவை: (1) பலி நிறைவேற்றும் அதிகாரம்; (2) போதக அதிகாரம்; (3) பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் ஆகியவையாகும்.*

*"எந்தக் குருவும் மனிதர்களுக்குள்ளே தெரிந்துகொள்ளப்பட்டு, காணிக்கைகளையும் பாவங்களுக்காகப் பலிகளையும் செலுத்தும்படி தேவ ஆராதனைக்கடுத்த காரியங்களில் மனிதர்களுக்கு உதவியாக ஏற்படுத்தப்படுகிறார்" (எபி.5:1) என்ற வாக்கியத்திலிருந்து, கிறீஸ்துநாதரும், மெல்கிசெதேக்கும் பலி ஒப்புக்கொடுத்தார்கள் என்பது விளங்குகிறது. கிறீஸ்துநாதர் மெல்கிசெதேக்கின் முறைமைப்படி அப்ப இரசத்தைத் தம் திருச்சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றி, நம் பாவங்களுக்குப் பரிகாரமாகப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். உடனே அதைத் தொடர்ந்து, அவர் தம் அப்போஸ்தலர்களுக்கு, "இதை என் நினைப்புக்காகச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டு, இவ்வாறு பலி செலுத்தும் முதல் குருக்களாக அவர்களை ஏற்படுத்தினார்.*

*இரண்டாவதாக, மீண்டும் அவர் அப்போஸ்தலர்களாகிய தம் முதல் குருக்களை நோக்கி: "நீங்கள் போய், சகல ஜாதி ஜனங்களுக்கும்* **உபதேசித்து***: பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப்* **போதியுங்கள்***" (மத். 28:19, 20) என்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறார். இதன் மூலம், மக்களுக்குப் போதிக்கிற அதிகாரத்தை அவர் தம் குருக்களிடம் ஒப்படைத்தார். திருச்சபையில் இயல்பு நிலை நிலவும் வரையில், குருக்களைத் தவிர வேறு யாரும் இந்த அதிகாரத்தைக் கொண்டிருக்க முடியாது என்பது உண்மை. இதனாலேயே அர்ச். யாகப்பர், "எல்லோருமே போதகர்களாகி விட வேண்டாம்" என்று கற்பிக்கிறார் (3:1).*

*மூன்றாவதாக, பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்: கிறீஸ்துநாதர் மீளவும் தம் அப்போஸ்தலர்களின் மீது தமது சுவாசத்தை ஊதி, "இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள்.* **எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படும்: எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னியாதிருக்கப்படும்***" என்று கூறி (அரு.20:22, 23) விசுவாசிகளின் பாவங்களை மன்னிக்கவும், மன்னியாதிருக்கவும் அவர்களுக்கு அதிகாரம் தந்தார்.*

*நான்காவதான ஓர் அதிகாரமும் உண்டு. அது கட்டுதலும், கட்டவிழ்ப்பதுமான அதிகாரம். இது முதன்மையான விதத்தில் அர்ச். இராயப்பருக்கும், அவர்களுடைய ஸ்தானாதிபதிகளான பாப்பரசர்களுக்கும் உரியது. இது இராயப்பரின் முதன்மை அதிகாரம் என்றே அழைக்கப்படுகிறது. திருச்சபையில் புதிய சட்டங்களை ஏற்படுத்தவும், இருக்கிற, ஆனால் தேவையற்ற சட்டங்களை அகற்றவும் இராயப்பருக்கு நம் ஆண்டவர் விசேஷமான முறையில் அதிகாரம் வழங்கினார்:*

**"பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீ பூலோகத்தில் எதைக் கட்டவிழ்ப்பாயோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்"** *(மத். 16:19). ஆயினும், சற்றுப் பிறகு,* **"பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவை பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவை பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்"** *(மத். 18:18) என்று எல்லா அப்போஸ்தலர்களிடமும் கூறி, இந்த அதிகாரத்தை அவர்களுக்கும் வழங்குகிறார். இவ்வாறு, அப்போஸ்தலர்களின் ஸ்தானாதிபதிகள் என்ற முறையில் மேற்றிராணிமார், பாப்பரசரின் அதிகாரத்திற்கு உட்பட்டு, தங்கள் அதிகார எல்லைகளுக்குள் சட்டங்களை ஏற்படுத்தவும், தளர்த்தவும் அதிகாரங் கொண்டிருக்கிறார்கள். பெந்தேகோஸ்தே திருநாளன்று திருச்சபை பிறந்தபின், பழைய வேதச் சட்டமாகிய விருத்த சேதனத்தின் நுகத்தை விசுவாசிகளிடமிருந்து அகற்றியதன் மூலம் அர்ச். இராயப்பர் இந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதை நாம் காண்கிறோம் (அப். நட. 15ஆம் அதிகாரம்).*

*ஆகவே, குருத்துவமின்றி திவ்ய பலி இல்லை; குருத்துவமின்றிப் பாவ மன்னிப்பு இல்லை; குருத்துவமின்றி வேதபோதகமில்லை; குருத்துவமின்றி திருச்சட்டங்களும் இல்லை. ஏனெனில் குருவானவர் மறு கிறீஸ்துவாக, தமது திருச்சபையில் தமது முழுமையான அதிகாரத்தைச் செயல் படுத்தும் கிறீஸ்துநாதராகவே இருக்கிறார். ஞான ஜீவியத்தின் தொடக்கமாகிய ஞானஸ்நானம் முதல், முடிவாகிய அவஸ்தைப் பூசுதல் வரை, ஒவ்வொரு கிறீஸ்தவனும் தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும், குருக்களைச் சார்ந்திருக்க வேண்டியவனாக இருக்கிறான்.*

*இவ்வுலகில் குருக்களுக்கு மேற்பட்டவன் ஒருவனுமில்லை. ஏனெனில் சம்மனசுக்களுக்கும், ஏன், அவர்களது இராக்கினியான தேவமாதாவுக்குமே கூட வழங்கப்படாத தெய்வீக அதிகாரம் அவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆயினும், "ஆரோனைப்போல் சர்வேசுரனாலே அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" என்று சின்னப்பர் கூறுகிறார் (எபி. 5:4). இன்று உலகில் நல்ல கத்தோலிக்க குருக்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது. காரணம்,* **பெற்றோர் தங்கள் குழந்தைகளின் தேவ அழைத் தலுக்காக, விசேஷமாக, குருத்துவ அழைத்தலுக்காக ஜெபிப்பதில்லை. பல பெற்றோர் தங்கள் பரிசுத்த வேதத்தை அறியாதவர்களாக இருக்கிறார்கள்.** *அவர்கள் தங்கள் பரிசுத்த வாழ்வின் மூலம் அவர்களுக்கு நன்மாதிரிகை தருவதில்லை. குழந்தைகளின் ஆசிரியர்கள், பங்கு குருக்கள் ஆகியோரும் இந்த அதிமுக்கியமான காரியத்தில் தெய்வீகமான முறையில் தங்கள் மீது சுமத்தப் பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதில்லை. ஒரு நாள் தேவ நீதியாசனத்திற்கு முன்பாக, இதற்கு அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை மறக்கலாகாது.*

*சிறுவர்களும், இளைஞர்களும், தங்கள் ஜீவிய அந்தஸ்தை அறிந்துகொள்ளும்படி தினமும் இஸ்பிரீத்துசாந்துவானவரிடம் ஜெபித்து வரவும், அது அவரால் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வுடன், எந்த உலகத்தன்மையான எதிர்ப்பையும் மீறி அந்த தேவ அழைத்தலைப் பற்றிக்கொள்ள வும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிறீஸ்துநாதருக்குச் சொந்தமானவர்கள். அவர் அழைக் கும்போது, பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க உரிமையற்றவர்களாகவே இருக்கிறார்கள்.*

*இறுதியாக, விசுவாசிகள் அனைவருமே குருத்துவ அழைத்தல் பெருகும்படி ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அர்ச். சவேரியாரைப் போல் ஆன்ம தாகத்தோடு ஆத்துமங்களை நரகத்திலிருந்து பாதுகாத்து, அவர்களை மோட்ச பாதையில் வழிநடத்திச் செல்ல நல்ல குருக்கள் தேவை. எனவே, தொடர்ந்து, அநேக பரிசுத்த குருக்களை நம் ஆண்டவர் நமக்குத் தந்தருளும்படி ஜெபிப்போம். இந்த வார்த்தைகளைச் சொல்லும்போதெல்லாம் நன்கு உணர்ந்து, நம் உள்ளத் திலிருந்து அவற்றைத் தினமும் சொல்வோமாக.*

**ஆண்டவரே, எங்களுக்குக் குருக்களைத் தாரும்!**

**ஆண்டவரே, எங்களுக்கு அநேக பரிசுத்த குருக்களைத் தாரும்!**

# அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



*அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் 1673ல் மோன்போர்ட்-சுர்-மியூ என்னுமிடத்தில் ஷான் பாப்டிஸ்ட், ஷான் லூயி மரீ ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தமது 12ஆம் வயதில், அவர் ரென்னேயிலிருந்த அர்ச். தாமஸ் பெக்கெட் சேசு சபைக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கே அவருடைய மாமன் பங்குக்குருவாக இருந்தார். அடுத்து அவர் அதே கல்லூரியில் தத்துவவாதமும், வேதசாஸ்திரமும் பயின்றார்.*

*உள்ளூர்க் குருவான ஜூலியன் பெல்லியேர் என்பவரின் பரிசுத்த வாழ்வால் கவரப்பட்ட அவர் ஏழைகளுக்கு மிஷன் போதகங்கள் நடத்த ஆவல் கொண்டார். பெல்லியேர் தம் மாணவர்களிடையே மாமரிக்கு முழு அர்ப்பண பக்தியைப் பரப்பிக்கொண்டிருந்தார். அவரது வழிகாட்டுதலின் கீழ், மோன்போர்ட் தேவமாதாவின் மீது விசேஷ பக்தி கொள்ளத் தொடங்கினார்.*

*அடுத்து, 1693-ல் புகழ் பெற்ற அர்ச். சுல்ஸ்பீஸ் குருமடத்தில் பயிலும்படி அவர் பாரிஸுக்குச் சென்றார். அவருடைய உபகாரி போதிய பணத்திற்கு ஏற்பாடு செய்யாததால், லூயிஸ் ஏழைகளோடு தங்கியபடி ஸார்போன் பல்கலைக்கழகத்தில் வேதசாஸ்திர வகுப்புகளில் பங்குபெற்றார். ஒரு கடும் வியாதிக்கு சிகிச்சை பெற்றபின், அவர் மீண்டும் அர்ச். சுல்ஸ்பீஸ் குருமடத்தில் 1695, ஜூலையில் சேர்ந்தார். அங்கே அவர் குருமட நூலகராக நியமிக்கப்பட்டார். இங்கே நிறைய ஞானப் புத்தகங்களை வாசிக்கவும், கிறீஸ்தவ வாழ்வில் திவ்ய கன்னிகையின் பங்கை அறிந்து கொள்ளவும் அவர் வாய்ப்புப் பெற்றார். பிற்காலத்தில் இந்த அனுபவமே "ஜெபமாலை இரகசியம்" என்னும் புகழ்பெற்ற நூலை அவர் எழுதக் காரணமாக இருந்தது.*

## குருத்துவம்

*லூயிஸ் 1700, ஜூனில் குருத்துவ அபிஷேகம் பெற்று, நாந்த்தே நகரில் பணி நியமனம் பெற்றார். வெளிநாட்டு வேதபோதகராவது அவரது பெரும் விருப்பமாக இருந்தது. ஆனால் அவரது ஆன்ம இயக்குனர் அவரை அதற்கு அனுமதிக்கவில்லை. அதே ஆண்டு நவம்பரில், அவர் அர்ச். சாமிநாதர் மூன்றாம் சபையில் சேர்ந்து, ஜெபமாலையைப் போதிக்க மட்டுமின்றி, ஜெபமாலை பக்த சபைகளை உருவாக்கவும் அனுமதி கேட்டுப் பெற்றுக்கொண்டார். அடுத்து, திவ்ய கன்னிகையின் பாதுகாவலின் கீழ் வேதபோதகப் பிரசங்கங்களையும், உள் தியானங்களையும் போதிக்கும் ஒரு சிறு குருக்கள் சபை ஒன்றை ஸ்தாபிப்பது பற்றி அவர் சிந்திக்கத் தொடங்கினார். இச்சமயத்தில் அவர் நாந்த்தே நகரின் மருத்துவமனை பரிபாலன குருவாக நியமிக்கப்பட்டார்.*

*ஒரு வேதபோதகராகத் தமக்கிருந்த தீராத தாகத்தால் மோன்போர்ட் அது பற்றிப் பாப்பரசர் பதினோராம் கிளமெண்ட்டிடம் ஆலோசனை பெற உரோமைக்குச் சென்றார். ஆனால் அவரோ புனிதரின் உண்மையான தேவ அழைத்தலை அடையாளம் கண்டு, பிரான்ஸிலேயே அவர் அதிகம் உழைக்க வேண்டியிருப்பதாக அவரிடம் கூறி, அப்போஸ்தலிக்க வேதபோதகர் என்னும் பட்டம் தந்து அவரைத் திருப்பி அனுப்பினார்.*

*லூயிஸ் சில வருடங்களாக ப்ரிட்டானி முதல் நாந்த்தே வரையுள்ள பகுதிகளில் வேதபோதகப் பிரசங்கங்கள் நடத்தி வந்தார். போந்த்ஷாத்தோ என்னுமிடத்தில், ஒரு பெரிய கல்வாரியைக் கட்டியெழுப்பத் தமக்கு உதவும்படி அவர் நூற்றுக்கணக்கான மக்களைத் தூண்டினார். ஆனால் அதைக் கட்டி முடித்து, மந்திரிக்கக் குறிக்கப்பட்ட நாளுக்கு முந்திய நாளில், ஜான்சனியப் பதிதர்களின் தூண்டுதலால், பிரான்ஸ் அரசனின் உத்தரவுப்படி அது இடிக்கப்பட இருக்கிறது என்பதை மேற்றிராணியார் புரிந்துகொண்டு, அது மந்திரிக்கப்படத் தடை விதித்தார். இச்செய்தி கிடைத்த போது, புனிதர் தாழ்ச்சியோடு, ''சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக'' என்று மட்டும் கூறினார்.*

## இறுதி ஆண்டுகள்

*அடுத்த சில வருடங்கள் வேதபோதகப் பிரசங்கங்களைப் போதிப்பதில் அவர் மும்முரமாக இருந்தார். ஆயினும் இச்சமயத்தில், ''மரியாயின் மீது உண்மை பக்தி,'' ''மரியாயின் இரகசியம்,'' ''ஜெபமாலை இரகசியம்,'' ''மரியாயின் குருக்கள் சபை மற்றும் ஞானத்தின் புதல்வியர் சபை ஆகியவற்றிற்கான விதித் தொகுப்புகள்'' மற்றும் பல பாடல்களை அவர் எழுதி முடித்தார். அவரது போதகங்களுக்கு ஆதரவைப் போலவே எதிர்ப்பும் இருந்தது. ஒரு முறை அவரை விஷம் வைத்துக் கொல்லும் முயற்சியும் நடந்தது. அதில் அவர் தப்பிப் பிழைத்தாலும், அவருடைய உடல் நலிவடைந்தது. என்றாலும் அவர் தொடர்ந்து போதித்தும், ஏழைச் சிறுவர், சிறுமியருக்காகப் பள்ளிகள் தொடங்கியும் வந்தார்.*

## ஞானத்தின் புதல்வியர் சபை

*புனிதரின் செயல்பாடுகள் லா ரோஷெல் நகர மேற்றிராணியாரை வெகுவாக ஈர்த்தன. அங்கே ஒரு பள்ளியைத் தொடங்க அவர் புனிதருக்கு அழைப்பு விடுத்தார். லூயிஸ் தமது ஞான மகளாயிருந்த மரிய லூயி த்ரிஷே என்பவளின் உதவியை நாடினார். அவர் பாய்ட்டியேர் நகரத்தில் பொது மருத்துவமனையை நடத்திக்கொண்டிருந்தாள். 1715ல் அவளும், கத்தரீன் ப்ரூனே என்பவளும் லா ரோஷெலுக்கு வந்து, ஒரு பள்ளியைத் தொடங்கினர். விரைவில் அதில் 400 மாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். 1715 ஆகஸ்ட் 22 அன்று, இந்த இருவரும் மரிய வால்லோ, மரிய ரெஞ்ஞியே ஆகியோருடன், லா ரோஷெல் ஆயரான தெ ஷாம்ப்ஃப்ளோ என்பவரின் அனுமதியுடன், புனிதரின் வழிகாட்டுதலின் கீழ் தங்கள் துறவற வார்த்தைப்பாடுகளைத் தந்தார்கள். புனிதர் அவர்களது சபைக்கு ஞானத்தின் புதல்வியர் சபை என்று பெயர் சூட்டி, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதையும், ஏழைகளைப் பராமரிப்பதையும் அவர்களுக்கு நோக்கமாகத் தந்தார். விரைவில் இந்த சபை சர்வதேச நிறுவனமாக ஆனது.*

## மரணமும், அடக்கமும்

*புனிதரின் 16 வருட குருத்துவ வாழ்வில், நான்கு ஆண்டுகள் அவர் காட்டின் அழகிய சூழலில், மோன்போர்ட் கிராமத்தின் அருகிலிருந்த மெர்வெந்த் குகையிலும், அர்ச். எலோயி வனவாச இல்லத்திலும் வனவாசத்தில் செலவழித்தார். கடின உழைப்பாலும், நோயாலும் நலிவடைந்த அவர் இறுதியாக, 1716, ஏப்ரல் 28 அன்று, தமது 43 வயதில் மரணமடைந்தார். பங்குக் கோவிலில் ஆயிரக்கணக்கானவர்கள் அவரது அடக்கத்தில் பங்குபெற்றார்கள். விரைவில் அவரது கல்லறையில் ஏராளமான புதுமைகள் நடக்கத் தொடங்கின.*

*1888-ஆம் ஆண்டில், பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர் அவருக்கு முத்திப்பேறு பட்டமளித்தார். 1947, ஜூலை 20 அன்று பாப்பரசர் பன்னிரண்டாம் பத்திநாதர் அவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் வழங்கினார். திருநாள்: ஏப்ரல் 28.*



# மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்



Cell: 94876 09983 Landline: 0461 2361989

| | | விலை ரூ. | தபாலில் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை | 220.00 | |
| 2 | உலகின் இறுதிக் காலங்கள் | 125.00 | |
| 3 | திருப்பாடுகளின் வரலாறு | 150.00 | |
| 4 | அனுதின ஜெபப் புத்தகம் | | |
| 5 | திருப்பாடுகளின் தியானம் | 90.00 | |
| 6 | அறிவோம் பத்துக் கட்டளைகள் | 100.00 | |
| 7 | மலைமேல் பிரசங்கம் | 65.00 | |
| 8 | அறிவோம் அப்போஸ்தலர்களை: அர்ச். பிலவேந்திரர் | 90.00 | |
| 9 | ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள் அடங்கியது) | 325.00 | |
| 10 | மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு | 125.00 | |
| 11 | கிறீஸ்துநாதர் அநுசாரம் | 250.00 | |
| 12 | மரியாயின் மீது உண்மை பக்தி | 125.00 | |
| 13 | பாத்திமா காட்சிகள் | 120.00 | |
| 14 | பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம் | | |
| 15 | சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள் | 35.00 | |
| 16 | கற்பு என் பொக்கிஷம் | 60.00 | |
| 17 | என்னைப்படி அல்லது வருத்தப்படு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது) | 25.00 | |
| 18 | ஞான உணர்த்துதல் | 40.00 | |
| 19 | Read Me or Rue It | 60.00 | |
| 20 | என்னைப் படிக்காவிட்டால் வருத்தப்படுவாய் | 80.00 | |
| 21 | கத்தோலிக்க வேத சத்தியங்கள் | 45.00 | |
| 22 | இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி | 35.00 | |
| 23 | ஞான சரீரம் | 35.00 | |
| 24 | சலேத் இரகசியம் | 35.00 | |
| 25 | மரியாயின் இரகசியம் | 30.00 | |
| 26 | தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள் | 30.00 | |
| 27 | The Penny Catechism | 35.00 | |
| 28 | அமலோற்பவ மாமரியின் போரணி | | |
| 29 | அன்னையை நேசிக்கப் பன்னிரு படிகள் | | |
| 30 | மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள் | 35.00 | |
| 31 | முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு) | 30.00 | |
| 32 | மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம் | 35.00 | |
| 33 | வியாகுல மாதா பக்தி | 35.00 | |
| 34 | தலை வெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை | 25.00 | |
| 35 | உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை | 15.00 | |
| 36 | காவல் சம்மனசானவர் | 10.00 | |
| 37 | சிலுவைப் பாதை | 15.00 | |
| 38 | பரிசுத்த ஆவி ஜெபம் | 6.00 | |
| 39 | சேசுவின் திரு இருதய மந்திரமாலை | 6.00 | |
| 40 | தேவமாதாவின் மந்திரமாலை | 10.00 | |
| 41 | அர்ச். சூசையப்பர் பக்தி மாலை | 15.00 | |
| 42 | அர்ச். சூசையப்பர் மகத்துவங்கள் | 60.00 | |
| 43 | ஆதித் திருச்சபையின் பத்து வேத கலாபனைகள் | 10.00 | |
| 44 | திருச்சபையின் கட்டளைகள் (சிறிய விளக்கத்துடன்) | 10.00 | |
| 45 | சேசுவின் இரக்க பக்தி | 10.00 | |
| 46 | அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம் | 10.00 | |
| 47 | தேவ அழைத்தல்கள் | 35.00 | |
| 48 | சின்னக் குறிப்பிடம் | 10.00 | |

| | | விலை ரூ. | தபாலில் விலை ரூ. |
|---|---|---|---|
| 49 | அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்) | 25.00 | |
| 50 | மனச் செபம் ஒரு விளக்கம் | 35.00 | |
| 51 | புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வரலாறு) | 70.00 | |
| 52 | பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு –Fr. அந்தோனி சேவியர் தொகுத்து எழுதியது | 60.00 | |
| 53 | ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது) | 100.00 | |
| 54 | மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம் | 35.00 | |
| 55 | 33 நாள் தயாரிப்பு: மாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்) | | |
| 56 | இறுதிக் கால யுகம் | 100.00 | |
| 57 | அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு | 100.00 | |
| 58 | புதுமைப் புனிதர் தந்தை பியோ | 200.00 | |
| 59 | வேத விளக்கம் (வீரமாமுனிவர் (சங்.ஜோசப் பெஸ்கி, சே.ச.) எழுதியது | 150.00 | |
| 60 | அன்பின் அரசர் | 150.00 | |
| 61 | நரகம் | 60.00 | |
| 62 | அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம் | 13.00 | |
| 63 | அர்ச். சிலுவை அருளப்பர் வாழ்க்கை வரலாறு | 80.00 | |
| 64 | நரக சத்தியம் | 70.00 | |
| 65 | தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம் | 150.00 | |
| 66 | மரியாயின் மகிமைகள் | 170.00 | |
| 67 | புதிய நட்சத்திரம் பிலோமினா | 60.00 | |
| 68 | அர்ச். பாஸி மரிய மதலேனாள் | 85.00 | |
| 69 | அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள் | 45.00 | |
| 70 | ஜெபமாலை ஜெபிப்பது எப்படி? | 10.00 | |
| 71 | A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic | 50.00 | |
| 72 | புனித அவிலா தெரேசம்மாள் சரித்திரம் - பாகம் 1 | 160.00 | பாகம் 2:ரூ.250 |
| 73 | கடவுள் மனிதனின் காவியம் (முதல் பாகம்) | 350.00 | |
| 74 | கடவுள் மனிதனின் காவியம் (இரண்டாம் பாகம்) | 350.00 | |
| 75 | கடவுள் மனிதனின் காவியம் (மூன்றாம் பாகம்) | 550.00 | |
| 76 | கடவுள் மனிதனின் காவியம் (நான்காம் பாகம்) | 350.00 | |
| 77 | கடவுள் மனிதனின் காவியம் (ஐந்தாம் பாகம்) | | |
| 78 | கடவுள் மனிதனின் காவியம் (ஆறாம் பாகம்) | 350.00 | |
| 79 | கடவுள் மனிதனின் காவியம் (ஏழாம் பாகம்) | 350.00 | |
| 80 | கடவுள் மனிதனின் காவியம் (எட்டாம் பாகம்) | | |
| 81 | கடவுள் மனிதனின் காவியம் (ஒன்பதாம் பாகம்) | | |
| 82 | கடவுள் மனிதனின் காவியம் (பத்தாம் பாகம்) | 550.00 | |
| 83 | புதிய ஏற்பாடு (வுல்காத்) | 500.00 | |
| 84 | மௌனப் புன்னகை (அர்ச். குழந்தை தெரேசம்மாள்) | 170.00 | |

## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து, நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.உங்கள் ஆன்ம சரீர நன்மைகளுக்காக தினமும் எங்கள் ஜெபங்களில் வேண்டிக்கொள்கிறோம். **உங்கள் மொபைல் எண்ணை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.**
2. மாதா பரிகார மலர் சந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் **94876 09983 என்ற எண்ணுக்கு Google Pay செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

A/c Name: SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code: SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch, Tuticorin.

**அனுப்ப வேண்டிய முகவரி**

**மாதா அப்போஸ்தலர்கள் சபை, ரோஸா மிஸ்திக்கா,**
**11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி. பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628 002.**
**போன் : 0461 2361989, அலைபேசி: 94876 09983. Email: tutirosamystica@gmail.com**
**சந்தா நன்கொடை செலுத்த: Google Pay: 94876 09983.**
**Website: www.apostlesofmary.in**

**நமது மாதா அப்போஸ்தலர்கள் சபைக்கு அனுப்பும் நன்கொடை மற்றும் காணிக்கைக்கு வரிச் சலுகை பெற்றுக்கொள்ள ரசீது (80G - AAJTS6976JF20215) பெற்றுக்கொள்ள முடியும்.**

**சேசு மரியாயில் அன்புள்ள மரியாயின் பிள்ளைகளே, நண்பர்களே, உபகாரிகளே,**

நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டட வேலைகள் கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வருகின்றன. சேசுவின் திரு இருதயத்திற்கும் (திவ்ய நற்கருணைக்கும்), மேலும், தேவ மாதா பாத்திமாவில் கேட்டுக்கொண்டபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்திக்கென்றும் இந்த ஆலயத்தை மிகுந்த முயற்சியுடன், உபகாரிகளின் உதவியினால் கட்டி வருகிறோம். தேவையான உதவிகள் கிடைக்காமையால் இக்கட்டட வேலைகள் இன்னும் முடியவில்லை. நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலயத்தை முழுமையாகக் கட்டி முடிக்க கீழ்க்கண்ட வகைகள் தேவைப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 01. | பீடத்தின் மேல் (Center) டவர் கான்கிரீட் & சென்டரிங் கூலி | ரூ. | 9,00,000.00 |
| 02 | ஆலயத்தின் உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & கூலி | ரூ. | 10,00,000.00 |
| 03. | ரூஃப் மேல் பக்கம் & உள்பக்கம் பூசுவதற்குப் பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி | ரூ. | 12,50,000.00 |
| 04. | கூரை ஓடு பதிக்கப் பொருட்கள் & லேபர் கூலி | ரூ. | 7,00,000.00 |
| 05. | ஆலயத்தின் முன் கோபுரம் (Front Tower) கட்டுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி | ரூ. | 7,50,000.00 |
| 06. | குருக்கள் தங்கும் இல்லத்திற்கு உள்பக்கம், வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி | ரூ. | 1, 05,000.00 |
| 07. | தேக்கு மரம் நிலை & கதவு 9, ஜன்னல் 14, லேபர் & வுட் பாலிஷ் | ரூ. | 17,50,000.00 |
| 08. | தரைக்கு வெள்ளை மார்பிள் கல் & லேபர் கூலி | ரூ. | 24,00,000.00 |
| 09. | எலெக்ட்ரிக்கல் சாமான்கள், (Fittings) விளக்குகள் & லேபர் கூலி | ரூ. | 6,00,000.00 |
| 10. | ஆலயம் முழுவதற்கும் வர்ணம் பூச பொருட்கள் & லேபர் கூலி | ரூ. | 12,00,000.00 |
| 11. | கண்ணாடி ஓவியங்கள் வேலை | ரூ. | 9,00,000.00 |
| 12. | திவ்ய பலிபூசை நிறைவேற்ற முக்கிய பீடம் (white marble work) | ரூ. | 9,25,000.00 |
| 13. | ஒரு பக்க பீடத்தின் (Side Altar) தேக்கு மர வேலை | ரூ. | 5,20,000.00 |
| | ஆலயம் கட்டி முடிக்கத் தேவையான மொத்தத் தொகை | ரூ. | 1,30,00,000.00 |

இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மாதாவின் அன்புப் பிள்ளைகள் தங்களால் முடிந்த உதவி அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**வங்கி விபரம்:**

**A/c Name : Society of Apostles of Mary**
**A/c No. : 121802000000473**
**IFS Code : IOBA0001218**
**Indian Overseas Bank,**
**Mappillaiyurani Branch,**
**Thoothukudi.**
**For Tax exemption: 80G - AAJTS6976JF20215**

இவண்,
மாதா அப்போஸ்தலர்கள் சபை மற்றும்
மாதா அப்போஸ்தலர்கள்

முகவரி:
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
11 / 519, சகாயமாதா பட்டணம், 2-வது தெரு,
தூத்துக்குடி - 628 002. போன்: 0461 2361989
அலைபேசி: 94876 09983 / 94872 57479
Email: tutirosamystica@gmail.com

# உலக ஜெயராக்கினி மாதா ஆலயம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்



கான்கிரீட் போட தயரான நிலையில் உள்ள ஆலயத்தின் தோற்றம்

**முகவரி**

மாதா அப்போஸ்தலர்கள் சபை,
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம்,
2வது தெரு, தூத்துக்குடி – 628 002.
தொலைபேசி: 0461 2361989
அலைபேசி: 94876 09983, 94872 57479
E-mail: tutirosamystica@gmail.com

**வங்கி விபரம்**

Account Name:
Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code: IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.

Google Pay: 94876 09983 Avail 80G for Tax Exemption - AAJTS6976JF20215



## மார்ச் & ஏப்ரல் மாதங்களின் முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துக்கள்

**மார்ச்:** தேவமாதா நித்திய கன்னிகை என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைக்குப் பரிகாரமாக ...

**ஏப்ரல்:** தேவமாதாவினுடைய பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றுகின்ற துரோகத்துக்குப் பரிகாரமாக ...

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்யும் கருத்தோடு முதல் சனிக்கிழமைகளில் **1.** பாவசங்கீர்த்தனம் செய்து, **2.** திவ்ய நன்மை உட்கொண்டு, **3.** 53 மணி ஜெபமாலை ஜெபித்து, **4.**ஜெபமாலையின் தேவ இரகசியங்களைத் தியானித்தபடி 15 நிமிடம் என்னோடு தங்கியிருப்பவர்களுக்கு, அவர்களது ஆத்தும இரட்சணியத்திற்கு அவசியமான சகல வரப்பிரசாதங்களையும் கொண்டு அவர்களின் மரண சமயத்தில் உதவுவதாக வாக்களிக்கிறேன்.

**இதுவே முதல் சனி பக்தி முயற்சி அனுசரிக்கும் முறையாகும்.**

மாதா பரிகார மலரில் விசுவாசத்திற்கோ, நல்லொழுக்கத்திற்கோ, கத்தோலிக்க திருச்சபைக்கோ அதன் போதனைகளுக்கோ உண்மையான பக்திக்கோ மாறுபாடான எந்தக் கருத்தும் வெளிவராது.
– மாதா பரிகார மலர் குழு

**MATHA PARIKARA MALAR**
**ROSA MYSTICA**
**(Opp. V.V.D. H. Sec. School)**
**SAHAYAMATHAPATTANAM**
**TUTICORIN - 628 002.**
**PH: 0461 - 2361989**
**Whatsapp & Gpay:**
**94876 09983**
E-mail: tutirosamystica@gmail.com
Web:www.apostlesofmary.in

**மாதா பரிகார மலர்**
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989
அலைபேசி: 94876 09983

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy, Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.

Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Editor: Sammanasu Navis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.